வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 17.11.2021 புதன்கிழமை | இதழ் : 347 | பக்கங்கள் : 16




## பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும்

# அரசுக்கு எதிராக கொழும்பில் திரண்டனர் பல்லாயிரம் மக்கள்!

கொழும்பு, நவம்பர் 17

உரம், சிமெந்து, சமையல் எரிவாயு என்பவற்றுக்கு நிலவும் தட்டுப்பாடு, அத்தியாவசியப் பொருட்கள் விலை உயர்வு என்பவற்றை கண்டித்தும், சம்பள உயர்வை வலியுறுத்தியும் தலைநகர் கொழும்பில் பல்லாயிரக்கணக்கான மக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

15



## புதிய அரசாங்கத்தை அமைக்க தயாராகுங்கள்!

### சஜித் மக்களுக்கு அழைப்பு



*கொழும்பு, நவ. 17*

*புதிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கு மக்கள் தயாராக வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.*

15

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கு அடுத்த ஆண்டுக்கு!

*கொழும்பு, நவ. 17*

*2019 ஏப்ரல் 21 தாக்குதலை தடுக்கத் தவறியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 12 அடிப்படை உரிமை மனுக்கள்மீதான விசாரணையை*

15

## கொரோனாவுக்கு 18 பேர் பலி!

*கொழும்பு, நவ. 17*

*நாட்டில் நேற்றுமுன்தினம் கொரோனா தொற்றால் 18 பேர் உயிரிழந்தனரென அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்*

15

## 13 இல் பறித்தவற்றை மீண்டும் வழங்குங்கள்

### சித்தார்த்தன் வலியுறுத்து

*கொழும்பு, நவ. 17*

*“இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி - இந்த நாட்டை முன்னேற்ற பாதையில் கொண்டுசெல்ல வேண்டுமென்ற கரிசனை இருந்தால் - அதில் அர்ப்பணிப்பிருந்தால் - முதலில் அரசி*

15

## ஞானசாரரின் நியமனத்தின் மூலம் முஸ்லிம்களை அச்சுறுத்த முயற்சி!

### ரிஷாத் பதியுதீன் எம். பி.

*கொழும்பு. நவ. 17*

*200 கோடி முஸ்லிம்கள் ஏற்றுக்கொண்ட அல்லாஹ்வை ‘உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி’ எனக்கூறி கேவலப்படுத்திய ஞானசார தேரரை ஒரே நாடு ஒரே சட்டம் ஜனா*

15

## நாட்டை முன்னேற்றுவதற்காக பட்ஜெட்டுக்கு ஆதரவளியுங்கள்

### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

*கொழும்பு, நவ.17*

*நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பை வழங்கும் நோக்குடன் வரவு - செலவுத் திட்டத்தை செயல்படுத்த ஆதரவு தருமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*பல்வேறு துறைகளில் பல நெருக்*

15

## மின்வெட்டும் இடம்பெறாது மின்சார கட்டணமும் உயராது

### அமைச்சர் காமினி உறுதி

*கொழும்பு, நவ. 17*

*மின்சாரம் வழங்கும் திறன் எங்களிடம் உள்ளது - மின்வெட்டு இடம்பெறாது கட்டணமும் அதிகரிக்காது என்று அமைச்சர் காமினி லொக்குகே*

15



# “பட்ஜெட்” மீதான விவாதத்தின்போது நிதி அமைச்சர் இருக்க வேண்டும்!

## சபையில் எதிரணி கோரிக்கை

கொழும்பு, நவ. 17

பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தின்போது நிதி அமைச்சர் சபையில் இருக்க வேண்டும் என்று அறிவிக்குமாறு எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தின்போது எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி. ஆகியோர் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

விவாதத்தில் உரையாற்றிய லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. கூறுகையில்,

“கேள்விகளைக் கேட்க சபையில் நிதி அமைச்சர் இல்லை. யாரிடம் நாங்கள் கேட்பது என்ற பிரச்னை காணப்படுகின்றது. பிரதி அமைச்சராவாது இருக்கின்றாரா?” என்றார்.

இதன்போது எழுந்த இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க,

“நிதி அமைச்சருக்குப் பதிலாக இவர்களிடம் சந்தேகங்கள் இருப்பின் அதனைத் தெளிவுப்படுத்த நாங்கள் தயாராக இருக்கின்றோம். இவர்கள் பக்கத்தில் நான்கு பேரே ஆசனங்களில் இருக்கின்றனர். இப்படி இருந்து கொண்டு நிதி அமைச்சரவைத் தேடுகின்றனர்” - என்றார்.

இவ்வேளையில் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. கூறுகையில், ”எங்களுக்கு உத்தியோகபூர்வமாகப் பதிலளிக்கக் கூடிய ஒருவரே இருக்க வேண்டும். பதிலளிக்க முடியாது நிதி அமைச்சர் ஒளிந்துகொண்டுள்ளார். எனக்குப் பதிலளிக்கக் கூடியவரிடமே நான் கேள்வி கேட்பேன்” - என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்னையை முன்வைத்து எழுந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி. கூறுகையில்,

“வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போது நிதி அமைச்சர் சம்பிரதாயபூர்வமாக சபையில் இருக்க வேண்டும். இதற்கு முன்னர் இருந்த அமைச்சர்கள் வந்திருந்தனர். அதன்படி இனிமேல் அவரை இங்கே இருக்குமாறு அழைப்போம்” - என்றார். (இ)

# சஜித் கொத்தணி உருவாகும் ஆபத்து

## பதறுகிறது மொட்டு கட்சி

கொழும்பு, நவ. 17

“கொரோனாவுடன் விளையாடக்கூடாது. போராட்டம் நடத்தி அரசியல் செய்வதற்கான நேரம் இதுவல்ல. எதிரணியின் போராட்டத்தால் ‘சஜித் கொத்தணி’ உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.” - என்று காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

மக்களை வீதியில் இறக்கி, சீரற்ற காலநிலையில் அவர்களை வதைப்படுத்தி அரசியல் நடத்தும் நேரம் இது வல்ல. நாட்டில் கொரோனா இருப்பது எதிரணி உறுப்பினர்களுக்கு தெரியாதா? அவர்களுக்கு தெளிவில்லை என்பதுதான் அவர்களின் நடத்தைமூலம் அறியமுடிகின்றது.

ஆரம்பத்தில் ஆடைத் தொழிற்சாலை கொத்தணி ஏற்பட்டது. அதன்பின்னர் புத்தாண்டு கொத்தணி உருவானது. ஆசிரியர்களின் போராட்டத்தாலும் கொத்தணி பரவியது. சஜித்தின் போராட்டத்தில் சஜித் கொத்தணியும் உருவாகும் அபாயம் உள்ளது. எமது அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது. தேர்தல் ஊடாக அரசை வீழ்த்துங்கள். மாறாக மக்களை பண யம் வைக்க வேண்டாம்.-என்றார்.(அ)

# நாணய நிதியத்திடம் கடனை வாங்குங்கள்!

## அமைச்சர்கள் பலர் வலியுறுத்தல்

கொழும்பு, நவ. 17

நாட்டின் டொலர் நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெற்றுக் கொள்ளுமாறு அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர் என அரசாங்கத் தகவல்கள் தெரிவித்தன.

டொலர் தட்டுப்பாடு எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியை கடுமையாகப் பாதித்துள்ளதாகவும் பல அமைச்சர்கள் சுட்டிக்காட்டினர்.

இங்கு கருத்து தெரிவித்த எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, டொலர் தட்டுப்பாடு எரிபொருள் இறக்குமதியை பெரிதும் பாதித்துள்ளதாக கூறினார்.

டொலர் பற்றாக்குறையானது எரிபொருள் மட்டுமன்றி மருந்துப் பொருட்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதால் சர்வதேச நாணய நிதியத்திடம் கடனுதவிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென அமைச்சர் கம்மன்பில சுட்டிக் காட்டினார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரை நாட்டுக்கு தேவையான எரிபொருளை இறக்குமதி செய்யும் திறன் கூட்டுத்தாபனத்துக்கு இருந்தாலும் அதன் பின்னர் எரிபொருளை இறக்குமதி செய்ய முடியாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனைப் பெறுவதே தற்போதைக்கு ஒரே வழி என அவர் தெரிவித்தார்.

வாசுதேவ நாணயக்கார, பந்துல குணவர்த்தன உட்பட பல அமைச்சர்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் கடனுதவி பெறுவதாயின் நிபந்தனைகளுக்கு இணங்கவேண்டும் என தெரிவித்துள்ளனர்.

அந்த நிபந்தனைகளை நிறைவேற்றி மக்கள் முன் செல்ல முடியாது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை, உற்பத்தி குறையும் பட்சத்தில் எரிபொருள் மற்றும் மருந்துப்பொருட் கள் மாத்திரமன்றி உணவுத் தானியங்களையும் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# ஒரு வயது ஆண் குழந்தை கொரோனாவால் மரணம்!

தியத்தலாவை, நவ. 17

கொரோனா வைரஸ் தொற்றால் ஒரு வயது ஆண் குழந்தை ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை தொற்றுடன் தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு மேற்கொண்ட ‘ரெபிட் அன்ரிஜென்’ பரிசோதனையின்போதே தொற்றுக்கு உள்ளாகியமை தெரியவந்துள்ளது.

உயிரிழந்த குழந்தையின் சடலம் தகனம் செய்யப்படும் என்று தியத்தலாவை பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜீவந்த பிரசன்ன தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் பிரதேசத்தின் கொங்கம ஆரம்பப் பாடசாலை அதிபருக்கும், மாணவர்கள் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது எனவும், அதனால் அப்பாடசாலை நேற்றுமுன்தினம் தொடக்கம் மூடப்பட்டுள்ளது எனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேலும் கூறினார்.

பாடசாலை மூடப்பட்டிருப்பதை பண்டாரவளை கல்வி வலயமும் உறுதி செய்துள்ளது.

அதிபருடனும், மாணவர்கள் இருவருடனும் தொடர்புகளைப் பேணியவர்களை கண்டறியும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (இ)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**08 கார்த்திகை 2021**

**“பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதம்!”**
**-மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)**

கல்வி TV CHANNEL-1

**17.11.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மாதிரி வினாத்தாள் மறுஒளிபரப்பு-LIVE கணிதம் மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி TV CHANNEL - 2

**17.11.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
17.11.2021 புதன்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# சிங்கள குடியேற்றத்தை தடுப்பதற்கான வழி?

அரசாங்கம் உள்ளக பொறிமுறை தொடர்பில் பேசிவருகின்றது. ஆனால், மறுபுறம் வடக்கு மாகணத்தின் சனத்தொகை பரம்பலை மாற்றியமைக்கும் வகையில், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை ஊக்குவிக்கின்றது. வவுனியா மாவட்ட தமிழ் மக்களின் சனத்தொகை பரம்பலை மாற்றியமைக்கும் வகையில், அநுராதபுர மாவட்டத்தின் கீழுள்ள நான்கு கிராமசேவையாளர் பிரிவுகளை, வவுனியா மாவட்டத்துடன் இணைத்து, புதிய சிங்கள தொகுதியொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இது தொடர்பில் உள்ளூர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்படவில்லை. கொழும்பு மட்ட தீர்மானங்களின் அடிப்படையில் இந்த விடயங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சிங்கள பகுதிகளிலுள்ள கிராமங்களை வடக்கு மாகாண எல்லைக்குள் புகுத்துவதன் ஊடாக புதிய வகையான சிங்கள காலனித்துவத்தை அறிமுகப்படுத்துகின்றது. இது மிகவும் ஆபத்தானது. ஆட்களைக் கொண்டுவருவது சிக்கல் என்பதால், கிராமங்களை இணைப்பதன் மூலம் மிகவும் திட்டமிட்ட வகையில் சிங்கள மேலாதிக்கத்தை தமிழ் மக்கள்மீது திணிக்க முயல்கின்றது.

திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களின் மூலமாக, கிழக்கு மாகாணத்தின் சனத்தொகை பரம்பல் மாற்றியமைக்கப்பட்டமை வரலாறு. கிழக்கு மாகாணத்தின் இரண்டு மாவட்டங்களான திருகோணமலை மற்றும் அம்பாறையில் தமிழ் மக்கள் இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டனர். மட்டக்களப்பில் மட்டுமே ஒப்பீட்டடிப்படையில் தமிழ் மக்கள் சனத்தொகை ரீதியில் ஓரளவு பலமாக இருக்கின்றனர். அதனையும் மாற்றியமைக்கும் வகையில் திட்டமிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மட்டக்களப்பு மேய்ச்சல் தரை விவகாரம் இதற்கு ஓர் உதாரணம். ஆனால், கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் தனித்து எதனையும் தீர்மானிக்க முடியாதளவிற்கு பலவீனப்படுத்தப்பட்டுவிட்டனர். தமிழர் தாயகக் கோட்பாட்டை பலவீனப்படுத்துவதற்கான அரசியல் கருத்தியல் இலக்காக கிழக்கு மாகாண தமிழ் மக்களையே கொழும்பின் சிங்களஆளும் வர்க்கம் பயன்படுத்தியிருந்தது. இதில் சிங்கள திட்டமிடலாளர்கள் வெற்றி பெற்றுவிட்டனர். யுத்தத்தை பயன்படுத்தி இதனை வெற்றிகரமாக செய்துமுடித்துவிட்டனர்.

இப்போது அவர்களின் ஆக்கிரப்புக்கண்கள், வடக்கு மாகாணத்தின் மீது திரும்பியிருக்கின்றதா? வவுனியாவை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் மேற்படி நடவடிக்கை ஆட்சியாளர்கள் வடக்கின் மீதும் தங்களின் ஆக்கிரமிப்பு பார்வையை விஸ்தரித்திருக்கின்றனரா - என்னும் சந்தேகத்தையே ஏற்படுத்திருக்கின்றது. தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்களை மேற்கொள்வதுதான் அரசாங்கம் கூறிவரும் உள்ளகப் பொறிமுறையா?

இந்த விடயங்கள் தொடர்பில் வழமைபோல் தமிழ் அரசியல்வாதிகளும் சிவில் சமூகக் குழுக்களும் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கின்றனர். ஆனால், இந்த எதிர்ப்புக்களுக்காக தங்களின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை அரசாங்கம் தற்காலிகமாகக் கைவிடலாம். ஆனால், அவர்களுக்குள் எரிந்துகொண்டிருக்கும் ஆக்கிரமிப்புத் தீ அணைந்துவிடப் போவதில்லை. மாகாண சபைகள் செயலற்றிருக்கும் சூழலைத் தங்களுக்கு சாதமாகப் பயன்படுத்திக் கொண்டு, ஆளுநர்கள் மூலம், திட்டமிட்ட குடியேற்றங்களை அரசாங்கம் மேற்கொள்ள முயற்சிப்பதுபோல் தெரிகின்றது.

இந்த விடயங்கள் தொடர்பில் சம்பந்தன் இராஜதந்திர தரப்பிற்கு விசேட அழைப்பை விடுக்கவேண்டும். அவர்களின் தலையீட்டை கோரவேண்டும். ஒருவேளை சம்பந்தன் அரசாங்கத்தை விரோதித்துக் கொள்ள விரும்பாவிட்டால், ஏனைய தமிழ் தேசிய தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து, இராஜதந்திர சமூகத்தை அணுக வேண்டும்.

இந்த விடயத்தை சர்வதேச மயப்படுத்த வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகிய அனைத்து தரப்பினரும், இந்த விடயத்தில் தங்களின் வழக்கமான முரண்பாடுகளை புறம்தள்ளி, ஓரணியில் செயலாற்ற வேண்டும். அரசியல் கட்சிகள் அனைத்தும் இணைந்து, நில அபகரிப்புக்கு எதிரான மக்கள் இயக்கம் ஒன்றை ஸ்தாபிக்கவேண்டும். சிவில் சமூக அமைப்புக்கள் இதில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இதன்மூலம் இராஜதந்திர சமூகத்தை அணுக வேண்டும். இந்த விடயத்தை இராஜதந்திர மயப்படுத்துவதன் மூலம் மட்டும்தான், முடிந்தவரையில் ஆக்கிரமிப்புக்களை கட்டுப்படுத்தலாம். இராஜதந்திர சமூகத்தினரின் பொறுப்புணர்வுமீதும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும். தமிழ் அரசு கட்சியின் நிபுணர்கள் குழு அமெரிக்காவில் கலந்துரையாடல்களின் ஈடுபடுவதாகக் கூறப்படும்போது, இங்கு நில ஆக்கிரமிப்பு நடந்துகொண்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். அதாவது, சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். சுவர் தொலைந்த பின்னர், கொள்கை சித்திரங்கள் பற்றிய உங்கள் வர்ணனைகளால் எவ்வித பயனுமில்லை. ஏனெனில், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை அதன் பின்னர் மீட்பது இயலாத காரியம். இந்த அரசியல் அடிப்படையை கருத்தில் கொண்டுதான் அரசாங்கம் செயல்படுகின்றது. இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புக்களும் இந்த அரசியலை அடிப்படையாகக் கொண்டுதான் முன்னெடுக்கப்பட்டது. அதில் அரசு வெற்றி பெற்றிருக்கின்றது. இதனை கருத்தில் கொள்ளாமல் அறிக்கையரசியலை மேற்கொள்வதால் எவ்வித பயனுமில்லை.

## கேலி கூத்தாகும் ஒரே நாடு - ஒரே சட்டம்:

# அருட்தந்தை சிறில் காமினி மீதான விசாரணையும் அம்பிட்டிய சுமணரத்ன தேரரின் அட்டகாசமும்!

- அலசுவது இராஜதந்திரி -



இரு வருடங்களுக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பந்தமாக வெளிநாடுகளில் வதியும் கத்தோலிக்க மக்களுக்கு இணையவழி சந்திப்பொன்றினூடாக விளக்கமளித்தார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் கத்தோலிக்க மத குருவான வண. பிதா சிறில் காமினி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறில் காமினிமீதான விசாரணை ஏழு மணிநேரம் இடம்பெற்றிருந்தது.

அருட்தந்தை சிறில் காமினிமீதான விசாரணைக்கு எதிர்புத் தெரிவித்து கொழும்பில் கத்தோலிக்க மதகுருமார்களும் கன்னியாஸ்திரிகளும் ஆர்ப்பாட்டமொன்றையும் கடந்த வாரம் நடத்தியிருந்தனர். அத்துடன், பரிசுத்த பாப்பரசரின் கவனமும் அருட்தந்தை சிறில் காமினி மீதான விவகாரம் தொடர்பாகத் திரும்பியிருந்தது. இதனால், சிறில் காமினிக்கு எவ்வித பிரச்னையையும் பெரிதாக ஏற்படுத்தாத விதத்தில் ஏழு மணிநேர விசாரணையின் பின்னர் அவர் குற்றப்புலனாய்வு அலுவலகத்திலிருந்து வெளியேறியிருந்தார்.

கொச்சிக்கடையிலுள்ள புனித அந்தோனியார் தேவாலயம் நாட்டில் மிகப் பிரசித்தி பெற்ற வழிபாட்டுத்தலமாகும். அங்கு, 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின்போது வழிபாட்டில் ஈடுபட்டிருந்த ஏராளமான பக்தர்கள் பலியாகினர். உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் மட்டுமல்ல. அத்தினத்தில் நீர்கொழும்பிலுள்ள தேவாலயம் மற்றும் மட்டக்களப்பிலுள்ள தேவாலயம் என்பவற்றிலும் ஒரே நாளில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களில் மூன்று இடங்களிலும் மொத்தம் 300 பேர் வரை கொல்லப்பட்டனர்.

இந்தப் பேரழிவு சம்பந்தமாக அறிவதில் வெளிநாடுகளில் வதியும் கத்தோலிக்க மக்கள் பேரார்வம் காட்டியிருந்தனர். ஏனெனில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக பல்வேறு கோணங்களிலும் பலதரப்பட்ட தகவல்களும் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. இதன்காரணமாக பேராயர் அதிவண. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஏற்பாடு செய்திருந்த கொழும்பிலிருந்து விளக்கமளிக்கும் இணையத்தள மகாநாட்டிலேயே அருட்தந்தை சிறில் காமினி வெளிநாட்டு கத்தோலிக்கர்களுக்கு தமது விளக்கத்தை வழங்கியிருந்தார்.

வடக்கே தீவிரவாத பிரச்னைகள் ஆரம்பமான காலப்பகுதியில்கூட வண. பிதா சிங்கராஜா மற்றும் வண. பிதா சின்னராசா ஆகியோர் அவர்கள் தெரிவித்த கருத்துகள் தொடர்பாக எண்பதுகளில் கைதாகியிருந்தனர்.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் மூன்று இடங்களில் ஒரே நேரத்தில் நிகழ்ந்த தாக்குதல் சம்பவங்கள் பேரழிவை ஏற்படுத்தியிருந்தபோதிலும் இதுவரை எவருமே கைதாகவோ அல்லது சட்டத்தின் முன்பாக நிறுத்தப்படவோ இல்லை. ஆனால், அந்தத் தாக்குதல் பற்றிய விளக்கத்தை வழங்கினார் என்ற அடிப்படையில் அருட்தந்தை சிறில் காமினி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

அருட்தந்தை சிறில் காமினியை குற்றப்புலனாய்வு விசாரணைக்கு உட்படுத்திய தருணத்திலேயே கிழக்கிலங்கையில் மட்டக்களப்பிலிருக்கின்ற அம்பிட்டிய சுமணரத்ன தேரர் பட்டிப்பளை பிதேச செயலகத்தின் முன்பாக செயலக ஊழியர்களை அவர்களின் பணியில் ஈடுபட விடாது குறுக்கீடு செய்து ஆர்ப்பாட்டம் செய்திருந்தார்.

அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தமது பணிகளில் குறுக்கிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பட்டிப்பளை பிரதேச செயலக ஊழியர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். பிரதேச செயலாளரின் அறைக்குள்ளேயே சென்று சர்ச்சைக்குரிய பிக்குவான அம்பிட்டிய சுமணரத்ன தேரர் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தார்.

பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கச்சல்கொடி கிராம உத்தியோகத்தர் பிரிவின் கெவிளியாமடு கிராமத்தில் அமைந்துள்ள பன்சலகல விகாரைக்கு முன்பாக உள்ள பொதுமக்களின் குடியிருப்புகளை அகற்றி தமக்கு அந்தக் குடியிருப்புகள் இருக்கின்ற காணிகளை தரவேண்டும் என்று கோரியே அம்பிட்டிய சுமணரத்ன தேரர் பட்டிப்பளை பிரதேச செயலாளர் செயலகத்தில் ஆர்ப்பாட்டம் செய்திருந்தார். ஏற்கனவே, கிழக்கிலங்கையில் பல குழப்பகரமான சூழ்நிலைகளை ஏற்படுத்தியவரே அம்பிட்டிய சுமணரத்ன தேரர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓர் அரச அலுவலகத்தினுள் நுழைந்து அரச பணிகளுக்கு இடையூறு விளைவிப்பதென்பது பாரதூரமான சட்ட விரோத நடவடிக்கையாகும். எனவே, அப்பட்டமாக ஒரு சட்டவிரோத செயலில் இறங்கியிருந்த அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படாதிருக்கின்ற நிலையில், கத்தோலிக்க மத குருவான அருட்தந்தை சிறில் காமினி அவரின் கருத்துச் சுதந்திரத்தை பயன்படுத்தியமைக்காக புலன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பது, அரசு அறிமுகப்படுத்தியுள்ள ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்ற கோட்பாட்டையும் கேலிக்குரியதாக்கி விட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**நவம்பர் - 17 புதன்கிழமை**
**பிலவ வருடம் - கார்த்திகை- 01**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 9.00 - 10.30 |
| ராகு காலம் | : | 12.00 - 1.30 |
| திதி | : | சதுர்த்தசி |



## இன்றைய ராசிபலன்

**17.11.2021**

**மேடம்**
புது வகை முயற்சி ஒன்றில் வெற்றி இலக்கை எட்டுவீர்கள். நினைத்ததை உரிய நேரத்தில் செய்து முடித்து நிம்மதி காண்பீர்கள். குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்ற சேமிப்பு உதவும்.

**இடபம்**
குழந்தைளுக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். உடனுக்குடன் அவசர முடிவுகளை எடுப்பதை தவிர்ப்பது நல்லது. விழிப்புடன் செயல்பட்டு அபாயத்தில் இருந்து தப்பிப்பீர்கள்.

**மிதுனம்**
வீடு சம்பந்தமாக எடுத்த முயற்சி நன்மை தரும். குடும்பத்தில் ஒருவருக்கு சிரமம் தந்து கொண்டிருந்த பிரச்னை அகலும். எதிலும் எச்சரிக்கை அவசியம். சிலருக்கு அநாவசியப் பயம் ஏற்படலாம்.

**கடகம்**
தொழிலில் இருந்த தேக்கநிலை மாறும். தாயின் சிரமம் தீரும். பக்கத்து வீட்டாருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு முடிவுக்கு வரும். குழந்தைகளின் வெளிநாட்டு முயற்சி வெற்றி அடைந்து மகிழ்விக்கும்.

**சிம்மம்**
பொருளாதார நிலை உயரும். முயற்சிகளில் வெற்றி உண்டு. திட்டமிட்டுச் செய்யும் விஷயம் மட்டுமே வெற்றி பெறும். சிலரது செயல்கள் உங்களின் கோபத்தை தூண்டும்படியாக இருக்கலாம்.

**கன்னி**
உணர்ச்சி வசப்படாமல் நிதானமாகச் செயல்பட்டால் நிம்மதி உண்டு. பண உதவி கிடைக்கும். இன்று அதிக வேலை பார்க்க வேண்டி வரும். குடும்பத்தினரால் மனநிறைவு ஏற்படும்.

**துலாம்**
பணியாளர்கள் ஆயுதங்களை கையாளும்போது கவனமாக இருக்கவும். தாய்வழி உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் விலகும். வாகனம், வீடு வாங்கும் முயற்சி இன்று வேகம் பிடிக்கும்.

**விருட்சிகம்**
புதிய வாய்ப்புகள் வாசற்கதவைத் தட்டும் நாள். வளர்ச்சி கூடும். கூடுதல் பணிச்சுமை காரணமாக சிறு சோர்வு உண்டாகும். குழந்தைகளின் செயலால் பெருமிதமும், முன்னேற்றமும் ஏற்படும்.

**தனுசு**
மூலம் தடைகள் அகலும். சிலருக்கு தேவையற்ற அலைச்சல் உண்டாகலாம். வாழ்க்கை துணையால் நன்மை உண்டாகும். குழந்தைகளுக்காக பாடுபடுவீர்கள். சிலர் உணர்ச்சிவசப்படுவீர்கள்.

**மகரம்**
குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். முன்னேற்றம் உண்டு. நண்பர்களிடம் மனம் திறந்து பேசி அவர்களின் அன்பை பெறுவீர்கள். புதிய விஷயங்களை கற்றுக் கொள்வதில் ஆர்வம் கொள்வீர்கள்.

**கும்பம்**
யோகமான நாள். முயற்சிகளில் நல்ல பலன் கிடைக்கும். நீண்ட நாட்களாக செய்ய நினைத்த ஒரு செயலை இன்று செய்து முடிப்பீர்கள். செலவுகள் ஏற்படலாம். பிரச்னைகள் மெல்ல அகலும்.

**மீனம்**
சகபணியாளர்களின் ஒத்துழைப்பு முன்பைவிட அதிகரிக்கும். உங்களது வாழ்வில் முன்னேற்றமான சூழ்நிலை தென்படும். குழந்தைகளின் செயல்கள் உங்களைப் பெருமைபட வைக்கும்.

### இலங்கை கடற்பரப்பில் தமிழக மீனவர் மரணம்;

# மறு பிரேத பரிசோதனை செய்யுமாறு உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு

மதுரை, நவ. 17

இலங்கை கடற்பரப்பில் கடந்த மாதம் கொல்லப்பட்ட தமிழக மீனவர் ராஜ்கிரண் உடலை மறுபிரேத பரிசோதனை செய்ய உயர் நீதிமன்ற மதுரை கிளை நேற்று உத்தரவு பிறப்பித்து உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினத்திலிருந்து கடந்த 18 ஆம் திகதி சுரேஷ்குமார் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் அதே பகுதியை சேர்ந்த சுகந்தன், சேவியர் மற்றும் ராஜ்கிரண் ஆகிய 3 மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குள் சென்றனர். அன்று இரவு நடுக்கடலில் மீன் பிடித்து கொண்டிருந்த மீனவர்களின் படகில் இலங்கை கடற்படையின் ரோந்து கப்பல் மோதியதில் படகு நடுக்கடலில் மூழ்கியது.

இதில் படகில் இருந்த 3 பேரும் நடுக்கடலில் தத்தளித்தனர். சுகந்தன் மற்றும் சேவியர் ஆகிய 2 பேரையும் எல்லை தாண்டி மீன் பிடித் ததாக கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்த னர். மாயமான மீனவர் ராஜ்கிரண், 2 நாட்கள் தேடுதலுக்கு பின் கடந்த 20 ம் திகதி நெடுந்தீவு அருகே சடலமாக மீட்கப்பட்டார். பின்னர் அவரது உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

உயிரிழந்த மீனவர் ராஜ்கிரண் உடலை மறுபிரேத பரிசோதனை செய்ய உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு பிறப்பித்து உள்ளது.



மீனவர் சுட்டு கொல்லப்பட்டாரா? அல்லது நீரில் மூழ்கி இறந்தாரா? என்பது குறித்து தெளிவுப்படுத்த வேண்டும்.

இலங்கை கடற்படையால் சுட்டு கொல்லப்பட்டிருந்தால் அதனை எளிதாக விட்டு விட இயலாது என்றும் நீதிபதி கூறியுள்ளார். மீனவரின் பிரேத பரிசோதனை அறிக்கையை வரும் 24 ம் திகதி நீதிமன்றில் தாக்கல் செய்யவும் அவர் உத்தரவிட்டு உள்ளார்.

# சூர்யாவை தொடர்ந்து விமர்சிப்பது எந்த வகையிலும் நியாயம் இல்லை

### அன்புமணிக்கு தயாரிப்பாளர்கள் சங்கம் கண்டனம்

சென்னை, நவ. 17

நடிகர் சூர்யாவைத் தொடர்ந்து விமர்சித்து வருவது எந்த வகையிலும் நியாயம் இல்லை என்று தமிழ்நாடு திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

சூர்யா நடிப்பில் உருவாகியுள்ள படம் “ஜெய் பீம்” படத்தில் வன்னியர் சமுதாயத்தை அவமதிக்கும் விதமான காட்சிகள் அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறி அது தொடர்பான அறிக்கையை பாமக இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து இந்த விவகாரம் தொடர்பாக ‘ஜெய் பீம்’ படக்குழு மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், .5 கோடி ரூபா இழப்பீடு தர வேண்டும் என்றும் கோரி வன்னியர் சங்கம் சார்பில் வழக்கறிஞர் மூலம் நேற்று முன்தினம் சூர்யாவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் நடிகர் சூர்யாவைத் தொடர்ந்து விமர்சித்து வருவது எந்த வகையிலும் நியாயம் இல்லை என்று உஷா ராஜேந்தர் தலைமையிலான தமிழ்நாடு திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம் அன்புமணிக்குக் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு திரைப் படத் தயாரிப்பாளர்கள் சங்கம் வெளியிட்ட அறிக்கை:

“நடிகர் சூர்யாவின் நடிப்பில் வெளிவந்த “ஜெய் பீம்” திரைப் படத்தில் தொழில் நுட்பக் கலைஞர்களால் காண்பிக்கப் பட்ட தங்கள் கட்சியின் முத்திரையை நீங்கள் அடையாளப் படுத்தி அதை நீக்க வேண்டும் என வேண்டுகோள் வைத்தீர்கள். அந்தக் காட்சி தொழில் நுட்பக் கலைஞர்களின் தவறான புரிதலால் இடம்பெற்றுள்ளதை அறிந்து தங்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அந்தக் காட்சியை உடனடியாக



திரைப்படத்திலிருந்து நடிகர் சூர்யா நீக்கிவிட்டார்.

அந்த முத்திரை இடம்பெற்றதில் படத்தின் தயாரிப்பாளரும், கதாநாயகனுமான நடிகர் சூர்யாவிற்கு எந்த வகையிலும் தொடர்பு இல்லை. இருப்பினும் தங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் நடிகர் சூர்யாவைத் தொடர்ந்து விமர்சித்து வருவது எந்த வகையிலும் நியாயம் இல்லை. இந்தச் செயல் மிகவும் வருத்தமளிக்கிறது” என தமிழ்நாடு திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# விசாரணை குழுக்கள் குறித்து நாங்கள் கவலைப்படவில்லை!

### எடப்பாடி பழனிச்சாமி அறிவிப்பு

சென்னை, நவ.17

எதிர்க்கட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மிரட்டுகிறார் என்றும், விசாரணை ஆணைக் குழுக்கள் குறித்து நாங்கள் கவலைப்படவில்லை என்றும் தமிழக எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி கூறினார்.

சேலம் மாவட்டத்தில் மழைநீர் சூழ்ந்த பகுதிகளை நேற்று சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதைத் தொடர்ந்து எடப்பாடி பழனிச்சாமி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

“தற்போதைய அரசு சரியான முறையில் திட்டமிட்டு செயல்படாத காரணத்தினாலேயே மழைநீர் தேங்கி மக்கள் அவதிக்குள்ளாகி உள்ளனர். வெள்ளநீர் தேங்குவதை நாங்கள் குற்றச்சாட்டாக கூறினாலும், அதற்கு மறுப்பு தெரிவிக்காமல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டு எதிர்க்கட்சியை மிரட்டுகின்ற



விதமாக பேசுகிறார்.

மக்கள் படும் அவதிகள், துன்பங்கள், துயரங்களை நாங்கள் அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்றால் அவர் விசாரணை ஆணைக்குழு போடுவதாக கூறுகிறார். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை” என எடப்பாடி பழனிச்சாமி கூறினார்.



# பங்களாதேஷ்-இலங்கை அமைச்சர்கள் சந்திப்பு!

கொழும்பு, நவ. 17

டாக்காவில் உள்ள அரச விருந்தினர் மாளிகை பத்மாவில் இலங்கை வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் பங்களாதேஷ் வெளிநாட்டு அமைச்சர் கலாநிதி. ஏ.கே. அப்துல் மொமனை நேற்று முன்தினம் சந்தித்தார்.

இலங்கை பங்களாதேஷில் மேற்கொண்டுள்ள முதலீடான சுமார் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சார்ந்த இரு நாடுகளுக்குமிடையிலான செயலூக்கமான வர்த்தக உறவுகள் குறித்து இரு அமைச்சர்களும் கலந்துரையாடினர்.

“சுமார் 110 இலங்கை நிறுவனங்கள் இங்கு இயங்கி வருவதுடன் குறிப்பாக காப்புறுதி, வங்கி மற்றும் மின்சாரம் போன்ற சேவைத் துறைகளில் சிறந்து விளங்குகின்றன. இருப்பினும், தற்போது ஆண்டுக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர் அளவில் வர்த்தகத்தின் அளவை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது.

பங்களாதேஷுடனான முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையில் இலங்கை ஆர்வமாக உள்ளதுடன், தொழில்நுட்பப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்வதில் மகிழ்ச்சி அடைகின்றது.

கப்பல் போக்குவரத்து மையமாக இலங்கை கவனம் செலுத்துவதால் கப்பல்துறையிலான ஒத்துழைப்பில் குறிப்பாக ஆர்வம் உள்ள அதே வேளை, பங்களாதேஷில் உள்ள சிட்டகொங் துறைமுகம் மற்றும் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்த இலங்கை விரும்புகின்றது.

நாம் குறிப்பாக தீவன சேவைகள் மற்றும் கடலோர கப்பல் ஏற்பாடுகளை வலியுறுத்துகின்றோம். நேரம் மற்றும் கடல் மைல்கள் குறைவதால், பங்களாதேஷுக்கும் இலங்கைக்கும் இடையிலான போக்குவரத்துப் பரிமாற்ற மையம் தொடர்பான ஒத்துழைப்பு பங்களாதேஷுக்கு நன்மை பயக்கும்” என வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள கல்வி நிறுவனங்களில் பங்களாதேஷின் தாதியர்களுக்கு பயிற்சி அளிப்பதில் இலங்கை பரஸ்பரம் உதவ முன்வந்துள்ளது. சுற்றுலாவைப் பொறுத்தமட்டில், கொழும்புக்கும் டாக்காவிற்கும் இடையிலான நேரடி இணைப்பு உதவிகரமாக உள்ளதுடன், கொழும்புக்கு விமானங்களை இயக்குவதற்கான தனியார் பங்களாதேஷ் விமான சேவையின் ஆர்வத்தை பங்களாதேஷ் அமைச்சர் தெரிவித்தார். (அ)

# பங்காளிகளை கட்டிப்போட தயாராகிறது மொட்டு கட்சி

## இனி முடிவுகள் கடுமையாக இருக்கும் என எச்சரிக்கை



**கொழும்பு, நவ. 17**

**எமது அபிவிருத்திப் பயணத்தை குழப்புவதற்கு முற்படும் தரப்புகள் நிச்சயம் விலக்கப்படும். இனி கடுமையான முடிவுகள் எடுக்கப்படும்.”- என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

2022 ஆம் ஆண்டென்பது அபிவிருத்திக்குரிய வருடமாகும். அந்த இலக்கை நோக்கி வேகமாக பயணிப்பதே எமது நோக்கம். அதனை குழப்ப முற்படும் தரப்பு நிச்சயம் விலக்கப்படும். ஆளுங்கட்சியா, எதிரணியா என்பது முக்கியமில்லை. எவர் தடை ஏற்படுத்தினாலும் அது தகர்க்கப்படும்.

எம்மீது நம்பிக்கை வைத்தே மக்கள் வாக்களித்தனர். அந்த நம்பிக்கையை நிச்சயம் நிறை வேற்றுவோம். மக்களுக்கு வழங்கிய உறுதிமொழியை மீற செயல்படமாட்டோம்-என்றார். (அ)

### தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான தெரிவுக்குழு பதவிக்காலம் நீடிப்பு

கொழும்பு, நவ. 17

தேர்தல், வாக்கெடுப்பு முறைமை மற்றும் சட்ட விதிமுறை மறுசீரமைப்பை அடையாளம் காணவும் அது சம்பந்தப்பட்ட திருத்தங்களை மேற்கொள்வதற்குமான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் பதவிக்காலம் மேலும் இரண்டு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன முன்வைத்த யோசனைக்கு பாராளுமன்றில் அனுமதி கிடைத்துள்ளது.

இந்தத் தெரிவுக்குழுவின் முதலாவது கூட்டம் கடந்த மே மாதம் 17 ஆம் திகதி இடம்பெற்றதுடன், அதன் அறிக்கை ஆறு மாதங்களில் முன்வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சிச்சபை பதவிக்காலம் நீடிப்பு குறித்து எந்த முடிவுமில்லை

கொழும்பு, நவ. 17

உள்ளூராட்சிச்சபைகளின் பதவிக் காலத்தை நீடிப்பது தொடர்பில் அரசு இன்னும் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இதன்போது உள்ளூராட்சிச்சபைகளின் பதவிக்காலம் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன் நிறைவடைகின்றது. எனவே, அவற்றின் பதவி காலம் நீடிக்கப்படுமா அல்லது தேர்தல் நடத்தப்படுமா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது விடயத்தில் அரசின் நிலைப்பாடு என்னவென்பதை பெப்ரவரி மாதம் அறியலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.(அ)

# எரிபொருளுக்கு எதற்கு வரிசை? அமைச்சர் கம்மன்பில விளக்கம்

கொழும்பு, நவ. 17

“நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என வதந்தி பரப்படுகின்றது. அந்த வதந்தி ஊடகங்களிலும் செய்திகளாக வெளியிடப்படுவதால்தான் ‘எரிபொருள் வரிசை’ ஏற்பட்டுள்ளது.”- என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

”எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும் என்பதால் சிலர் கூடுதலாக நிரம்புகின்றனர். மேலதிகமாகவும் வாங்கி வைத்துக்கொள்கின்றனர். அதனால் தான் வரிசை ஏற்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு நாட்களில் இந்நிலைமை மாறும். எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது.” - என்றும் அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிட்டார். (அ)

# ‘எனக்கொரு சிலிண்டர் வேண்டும்’

## எரிவாயு ஏற்றிச்சென்ற வாகனத்தை மறித்து பெண் ஒருவர் போராட்டம்

கொழும்பு, நவ. 17

‘எனது உடலின் மேலாக வாகனத்தை ஏற்றிச் சென்றாலும் பரவாயில்லை, எரி வாயு சிலிண்டர் தராவிட்டால் இங்கிருந்து எழும்ப மாட்டேன்’ என, எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச் செல்லும் பாரவூர்தியை மறித்து பெண்ணொருவர் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

வாதுவ, பொதுப்பிட்டிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இந்த சம்பவம் நடந்தது.

அங்குள்ள எரிவாயு முகவர் கடைக்கு, எரிவாயு சிலிண்டர்களை ஏற்றி வந்த பாரவூர்தியை மறித்தே, அந்தப் பெண் போராட்டத்தில் ஈடுபட்டார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றியபடி அந்த கடைக்கு பாரவூர்தி வந்தது. எரிவாயு வாங்க ஏராளமானவர்கள் அங்கு குவிந்திருந்தனர். காத்திருந்தவர்கள் அனைவருக்கும் எரிவாயு கிடைக்க வில்லை.

ஒரு பிள்ளையின் தாயொரு வரும் எரிவாயுவுக்கு காத்திருந்த ஏமாற்றமடைந்தார்.

உடனடியாக எரிவாயு ஏற்றி வந்த பாரவூர்தியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டார். வாகனத்தின் முன்பாக தரையில் உட்கார்ந்த அவர், தனக்கு மேலாக வாகனத்தை ஏற்றி சென்றாலும் பரவாயில்லை, அங்கிருந்து எழுந்து செல்லமாட்டேன் என கூறிவிட்டார்.

சுமார் ஒரு மணித்தியாலயமாக அவர் வாகனத்தின் முன்பாக அமர்ந்திருந்தார். இதனால் வாகனம் நகர முடியவில்லை.

இதனால் அங்கு சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டது.



சம்பவத்தை கேள்வி யுற்ற வாதுவ பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சம்பவ இடத்துக்கு வந்து காஸ் சிலிண்டர் வழங்கப்படும் என உறுதியளித்ததன் பேரில் அவர் எழுந்து, வாகனத்துக்கு வழிவிட்டார்.

பின்னர் கடையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த எரிவாயு சிலிண்டர் ஒன்றை எடுத்து, பொலிஸார் அவரிடம் ஒப்படைத்தனர். (அ)

# வீடுகளில் சிகிச்சை பெற்றுவரும் தொற்றாளர் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, நவ. 17

நாட்டில் கோவிட் -19 தொற்றுக்குள்ளானவர்களில் 109,373 பேருக்கு வீடுகளிலேயே சிகிச்சையளிக்கப்பட்டு குணமடைந்துள்ளனர்.

தற்போதும் 3,813 தொற்றாளர்கள் வீடுகளிலேயே சிகிச்சை பெற்று வருகின்றனர். வீடுகளில் சிகிச்சை பெறும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் வீடுகளில் சிகிச்சையளிக்கும் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் அஜந்தி கருணாரத்ன தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கோவிட் -19 தொற்றாளர் எண்ணிக்கை தீவிரமாக அதிகரித்து வந்தமையின் காரணமாக வைத்தியசாலை கட்டமைப்பில் ஏற்பட்ட நெருக்கடியை சமாளிப்பதற்காக கடந்த ஜூன் மாதம் முதல் வீடுகளிலேயே சிகிச்சையளிக்கும் முறைமை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த முறைமையின் கீழ் இது வரையில் 109, 373 தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. தற்போதும் 3,813 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்-என்றார்.

# 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு இன்று முதல் பூஸ்டர் தடுப்பூசி!

கொழும்பு, நவ. 17

ஏற்கனவே இரண்டு தடுப் பூசிகளைப் பெற்றுக்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்ட பொது மக்களுக்கு 3ஆவதாக பைசர் "பூஸ்டர்" தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பமாகின்றது.

முதல் கட்டமாக மேல், தென் மாகாணங்கள், அனுராதபுரம் மற்றும் அம்பாறை மாவட்டங் களில் இன்று முதல் மூன்றாவது பைசர் தடுப்பூசி வழங்கும் நடவ டிக்கை ஆரம்பமாகும். தொடர்ந்து ஏனைய பகுதிகளுக் கும் இது விரிவுபடுத்தப்படும்.

ஏற்கனவே இரண்டு தடுப் பூசிகளையும் போட்டு 3 மாதங் கள் முடிந்தவர்கள் 3 ஆவது பைசர் தடுப்பூசியைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

முதல் கட்டமாக, சுகாதாரத் துறையினர், முப்படையினர், பொலிஸார், சுற்றுலாத்து றையில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் முன்களப் பணியாளர் களுக்கு மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி போடும் நடவடிக்கை கடந்த முதலாம் திகதி ஆரம்பிக் கப்பட்டது. இதுவரை 100,000 க்கும் மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசிகள் வழங்கப் பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக 20 வயதுக்கு மேற்பட்ட அனைவ ருக்கு பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் வழங்கப்படும். இதற் காக 14.5 மில்லியன் பைசர் தடுப்பூசிகளை வாங்க அரசாங் கம் திட்டமிட்டுள்ளது.

# இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியை அநாதைகள் இல்லத்துக்கு வழங்குங்கள்

## குடும்பத்தினரை வலியுறுத்தி உரிமையாளர் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாணம், இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியை ஆதரவற்றவர்களை பராமரிக் கும் இல்லம் அல்லது பொது நிறுவனங்களுக்கு வழங்க வலியுறுத்தி அதன் உரிமையா ளர் உண்ணாவிரதப் போராட் டத்தில் ஈடுபட்டார்.

தனது குடும்பத்தினரை வலி யுறுத்தியே அவர் கல்லூரி முன்பாக இந்தப் போராட்டத்தில் ஈடு பட்டார்.

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி சார்பில் பணம் கடனாக பெறப்பட்டுள்ளதாகவும், அந்த பணத்தை திருப்பிச் செலுத்தி விட்டு, கலைக்கல்லூரியை பொது நிறுவனங்களுக்கு வழங்க வேண்டுமென வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் நடத்தப் பட்டது.

கலைக்கல்லூரியை விற் கவோ, வழங்கவோ மனைவி கையொப்பமிட மறுக்கிறார் என போராட்டத்தில் ஈடுபட்ட உரிமையாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பிரதேச செயலாளர் சம்பவ இடத்துக்கு சென்று, சமரசம் செய்து போராட்டத்தை முடித்து வைத் துள்ளார். (அ)

# சாவகச்சேரி தவிசாளர் உட்பட ஐவருக்கு கொரோனா உறுதி!

யாழ்ப்பாணம், நவ. 17

சாவகச்சேரி சுகாதார மருத் துவ அதிகாரி பணிமனையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோத னையில் சாவகச்சேரி நகரசபை தவிசாளர் உட்பட ஐவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத் துவ அதிகாரி பணிமனையில் நேற்று 36 பேருக்கு மேற்கொள் ளப்பட்ட அன்ரிஜென் பரிசோ தனையில் குறித்த ஐவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி மங்கயற் கரசி, சாவகச்சேரி யூனியன் வெதுப்பகத்துக்கு அருகாமை யில் செயற்பட்டுவரும் நிறுவ னம் ஒன்றில் பணியாற்றும் மூவர், சாவகச்சேரி சங்கத்தா னையைச் சேர்ந்த நபர் என ஐவ ருக்கு தொற்று உறுதி செய்யப் பட்டிருப்பதாக சுகாதாரப் பிரிவு தரப்பினர் தெரிவித் துள்ளனர்.

குறித்த நிறுவனத்தில் முத லில் ஐவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் பின்னர் மேலும் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டி ருந்தது.

இந்நிலையில் நேற்று மேலும் மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து அங்கு தொற்று உறுதி செய் யப்பட்டவர்களது எண் ணிக்கை 10 ஆக உயர்ந்துள் ளது. (அ)

# திடீரென்று விசேட பாதுகாப்பு! பிரபாகரன் வரப்போகிறாரா?

## சபையில் எதிரணி கேள்வி

**கொழும்பு, நவ. 17**

**நாட்டில் ஏன் திடீரென பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளது. பாராளுமன்றத்துக்கு தாக்கு தல் அச்சுறுத்தல் உள்ளதா அல்லது பிரபா கரன் மீண்டும் வரப்போகின்றாரா என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார.**



பாராளுமன்றத்தில் நேற்று ஒழுங்குப்பிரச்னையொன்றை எழுப்பிய அவர்,

"பிங்கிரியவில் இருந்து பாராளுமன்றத்துக்கு வரும் வழியில் 21 இடங்களில் சோதனை சாவடிகள் அமைக் கப்பட்டுள்ளன. 10 சாவடிகளில் எனது வாகனம் நிறுத்தப்பட் டது. காலை 6 மணிக்கு வந் தும், சோதனையால்தான் தாமதம் ஏற்பட்டது.

எதற்காக திடீர் பாதுகாப்பு? பாராளுமன்றம்மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதா அல்லது பிரபாகரன் மீண்டும் வரப்போகிறாரா? என்னால் அல்ல, அமைச்சர் சரத் வீரசேகர வால்தான் எனக்கு தாமதம் ஏற்பட்டது. எனவே, கேள்வி எழுப்ப வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்." -என்றார்.

எனினும், அவருக்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை. பதில்கள் சபையில் முன்வைக் கப்பட்டன. (அ)

# 2ஆவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாடு நேற்றுக் காலை யாழ். பல்கலையில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் ஏற்பாட்டில் இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு நேற்று காலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகியது.

தமிழ்த்துறையின் தலைவர் பேராசிரியர் ம. இரகுநாதன் தலைமையில் ஆரம்பமாகிய இந்த ஆய்வு மாநாட்டில் பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா முதன்மை விருந்தினராகவும், கலைப்பீடாதிபதி பேராசிரியர் க.சுதாகர் சிறப்பு விருந்தினரா கவும் கலந்துகொண்டனர்.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவரும், வாழ்நாள் பேராசிரி யருமான, பேராசிரியர் அ. சண் முகதாஸ் மாநாட்டின் திறப்பு ரையை வழங்கி மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

மாநாட்டின்போது, ஈழத் துத் தமிழ் இலக்கியத்துக்கும், மொழிக்கும் தொண்டாற்றிய ஏழு புலமையாளர்களுக்குக் கௌரவம் வழங்கப்பட்டது. பண்டிதர் கதிரிப்பிள்ளை




உமாமகேஸ்வரம்பிள்ளை, பண்டிதர் க. ஈஸ்வரநாத பிள்ளை, பண்டிதை வைகுந்தம் கணேசபிள்ளை, பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை, பண் டிதர் ம.ந. கடம்பேஸ்வரன், பண் டிதர் வீ. பரந்தாமன், பண்டிதர் கலாநிதி செல்லையா திருநாவுக் கரசு ஆகிய ஏழு புலமையாளர் களே கௌரவிக்கப்பட்டனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை யும்,இன்று புதன்கிழமையும் நடைபெறவுள்ள இந்த ஆய்வு மநாட்டில் சுமார் 61 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட வுள்ளன. (அ)

# எரிபொருள் தட்டுப்பாடு, மின் தடை நாட்டில் ஏற்படும் அபாய நிலைமை

## ஜே.வி.பி. எச்சரிக்கை

கொழும்பு, நவ. 17

இலங்கையில் உள்ள ஒரே யொரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ளதால் நாட்டில் எரிபொருள் தேவையை ஈடு செய்வதில் பெரும் நெருக்கடி ஏற்படும் என ஜே.வி.பி. மத்திய குழு உறுப்பி னரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நலிந்த ஜய திஸ்ஸ தெரிவித்தார்.

டீசல் ஏற்றப்பட்ட நிலை யில் இலங்கைக்கு வந்துகொண் டிருக்கும் கப்பல் ஒன்று இன்று (நேற்று) இரவு வந்து சேரும் என எதிர் பார்க்கப்படும் நிலையில் அது உரிய நேரத்தில் வரத் தவறி னால் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்சார விநியோகத் தில் தடங்கல்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என அவர் மேலும் கூறினார்.

நேற்று கொழும்பில் செய்தி யாளர்களிடம் பேசிய அவர் தெரிவிக்கையில்-

மண்ணெண்ணெய் தட்டுப் பாடும் விரைவில் ஏற்படும்.

இந்த நெருக்கடியை அரசாங்கம் எவ்வாறு சமா ளிக்கப் போகிறது? என்பதை நாட்டுக்கு அறிவிக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோருகின்றோம்-என்றார். (அ)

# தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் 73 பேர் கைது

கொழும்பு, நவ. 17

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 73 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத் தகவலில் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 82 ஆயிரத்து 366 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

# மாகாணசபை நிதி சரியாக பயன்படுத்தப்படுவதில்லை

## வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

**வவுனியா,நவ. 17**

**மாகாண சபையின் நிதிகளை சரியான முறையில் செலவு செய்வதில்லை என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.**



வவுனியா மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் அரச அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களின் திருத்த வேலைகள் தொடர்பில் கலந்துரையாடினோம். அனைத்து குளங்களும் திருத்தப்படவேண்டும். குளங்களின் நிலப்பகுதிகள் சில மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இது தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றோம். கால்நடைகளுக்கு உணவு பிரச்னை இருக்கின்றது. அதனை தீர்ப்பதற்கு என்ன செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியும் என்பது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம்.

அத்துடன் மாகாண சபைக்குள் உள்ள நிதிகளை சரியான முறையில் செலவழிப்பதில்லை. மத்திய அரசாங்கம், மாகாண சபை, ஆளுநர் அலுவலகம் என்பன இணைந்து நிதி சம்பந்தமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். இருக்கும் நிதிகளை சரியான முறையில் செலவு செய்யத் திட்டமிட்டு வருகின்றோம்.

அரச உத்தியோகர்தர்கள் மக்களுக்கு சரியான முறையில் வேலை செய்யவேண்டும். ஊழல் செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுடன் வேலை செய்ய முடியாது. கடந்த காலத்தில் அல்லது தற்போது என்றால்கூட ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றால் உரிய முறையில் விசாரணை செய்யப்படும். வேண்டும் என்றும் குற்றச்சாட்டுக்களை சிலர் மீது சுமத்தலாம். ஆனால் விசாரணை செய்யும் அதிகாரிகள் அதனை சரியாக முன்னெடுப்பார்கள். ஊழல் மோசடிகளுக்கு இடமளிக்க முடியாது-என்றார்.(அ)

# இலங்கை பொலிஸ் இராச்சியமல்ல!

## சபையில் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 17

“போராட்டத்தில் பங்கேற்கவரும் மக்களை ஒடுக்கும் செயலை உடனடியாக நிறுத்துங்கள்.” - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

இலங்கை என்பது பொலிஸ் இராச்சியம் அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

தாம் எதிர்நோக்கும் பிரச்னைகளை எதிர்க்கட்சித் தலைவருக்கு எடுத்துக்கூறும் உரிமை மக்களுக்கு இருக்கின்றது.

இந்நிலையில் மக்கள் கொழும்பு வருவதை தடுப்பதற்கு பொலிஸார் தடை உத்தரவு பெற முற்பட்டுள்ளனர். பெரும்பாலான நீதிமன்றங்கள் பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்துள்ளன.

பொலிஸார் உட்பட பாதுகாப்பு தரப்பினரை நான் கொச்சைப்படுத்த விரும்பவில்லை.

மக்களை ஒடுக்கும் செயலை உடன் நிறுத்துங்கள். அத்தகைய செயல்கள் கீழ்த்தரமானவை. இலங்கை என்பது பொலிஸ் இராச்சியம் அல்ல-என்றார். (அ)

# மேலதிக வகுப்புக்களுக்கு அனுமதி

சாதாரண தர மற்றும் உயர்தர மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்கள் நேற்று தொடக்கம் ஆரம்பமாகின.

மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 50 வீதமான மாணவர்களை உள்ளடக்கி இவ்வாறு மேலதிக வகுப்புக்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழி காட்டல்களில் இவ்வாறு மேலதிக வகுப்புக்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நூற்றுக்கும் அதிகமான மாணவருக்கு அநுராதபுரத்தில் கொரோனா தொற்று

## நாளாந்த நோயாளர்களிலும் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 17

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள நூற்றுக்கும் அதிகமான ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக மாவட்ட தொற்று நோய் பிரிவின் விசேட வைத்தியர் ஆர்.எம்.எஸ்.பி.ரத்னாயக்க தெரிவித்தார்.

மாவட்டத்திலுள்ள 55 க்கும் அதிகமான பாடசாலைகளிலுள்ள ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தொற்று நோய்ப் பிரிவின் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

அடையாளம் காணப்பட்ட மாணவர்கள் கல்வி பயின்ற வகுப்புக்களைச் சேர்ந்த 250 இற்கும் அதிகமான மாணவர்கள் தற்சமயம் அவர்களின் வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் இருபதுக்கும் அதிகமான ஆசிரியர்களுக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை அன்ரிஜென் பரிசோதனை முடிவுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, அநுராதபுரம் மாவட்டத்தில் நாளாந்தம் கணிசமான அளவு கொரோனா நோயாளர்கள் அடையாளங் காணப்படுவதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அநுராபுரம் மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களில் மாத்திரம் 2 ஆயிரத்துக்கும் அதிகளவான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தொற்று நோய் தொடர்பான வைத்திய நிபுணர் ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

இவர்களில் அதகளவில் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களே உள்ளடங்குகின்றனர். ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 800 பேருக்கு கொரேனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் கடந்த இரு வாரங்களில் 2 ஆயிரத்து 650 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாளாந்தம் 500 பேருக்கு அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. அர்களில் 250 முதல் 300 வரையானவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்படுகிறது.

இதுவரையில் 28 ஆயிரத்து 500 க்கும் அதிகமான தொற்றாளர்கள் அடயாளம் காணப்பட்டுள்ளதுடன் 341 கொரோனா மரணங்களும் மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளன-என்றார். (அ)

# இன்னும் 10 நாட்களில் தொற்று தீவிரமடையும்

## சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 17

மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை முறையாக பின்பற்றாவிட்டால் இன்னும் 10 நாட்களில் கோவிட் தொற்றாளர்கள் தீவிரமடையும் அபாயம் உள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். கோவிட் நோய் பரவல் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது புதிய அலையின் ஆரம்பம் எனக் கூற முடியாது. ஆனால் அப்படி ஒரு நிலைமை ஏற்படாதென எங்களால் கூற முடியாது. அதற்கு காரணம் தற்போதைய கோவிட் தொற்றாளர்களின் அதிகரிப்பாகும்.

கடந்த நாட்களாக காணப்பட்ட மக்களின் செயற்பாடுகளின் முடிவாகவே இந்த அளவுக்கு கோவிட் தொற்றாளர்கள் அதிகரித்துள்ளனர்.

இன்னும் சில நாட்களுக்குப் பிறகு அல்லது 10 முதல் 15 நாட்களுக்குப் பிறகு எங்கள் நடத்தை முறையின் விளைவாக அதிகரிக்கும் நோயாளிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

தற்போதைய நிலைமை தொடர்ந்தும் நீடித்தால் எதிர்வரும் நாட்களில் அடையாளம் காணப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும்.

எனினும் இன்று நாங்கள் சிந்தித்து செயற்பட்டால் எதிர்வரும் 10 முதல் 15 நாட்களுக்கு அதிகரிக்கும் தொற்றாளர்களை எங்களால் தடுக்க முடியும்.

அதற்காக சுகாதார நடைமுறைகளை நாங்கள் உரிய முறையில் பிற்பற்றி செயற்படவேண்டும். உரிய முறையில் முகக் கவசம் அணிதல் உட்பட அனைத்து நடவடிக்கைகளையும் உரிய முறைய பின்பற்ற வேண்டும்-என்றார். (அ)

# கொரோனாவைக் கட்டுப்படுத்தவே பெருமளவு பொலிஸார் பாதுகாப்பில்

## சபையில் கூறினார் அமைச்சர் சரத் வீரசேகர

கொழும்பு, நவ. 17

கொரோனா நோய்த் தொற்று மேலும் பரவாமல் தடுப்பதற்காக வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களை பராமரிக்கவே சுகாதார அதிகாரிகளுக்கு பொலிஸார் உதவுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்துள்ள பேரணியில் கலந்துகொள்ள நேற்றுக் காலை கொழும்பு நகருக்கு வருபவர்களை பொலிஸார் தடுத்தனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் வீரசேகர இந்தக் கருத்தை வெளியிட்டார்.

தொற்றுநோயைக் கட்டுப்படுத்த அவர்கள் வழங்கிய வழிகாட்டுதல்களைப் பராமரிக்க மட்டுமே பொலிஸார் சுகாதார அதிகாரிகளுக்கு உதவியதாகவும் தற்போது எதிர்க்கட்சிகள் செய்ய வேண்டியது வைரஸ் பரவலை எதிர்த்துப் போராட அரசுக்கு உதவுவது தான் எனவும் அவர் கூறினார்.

இருப்பினும் அவை அரசாங்கத்தையும் மக்களையும் அழிக்க மட்டுமே வைரஸ்/க்கு



உதவுகின்றன என்று அவர் மேலும் கூறினார்.

நாட்டின் பாதுகாப்பை தாங்கள் உறுதி செய்துள்ளதாகவும் பயங்கரவாத தாக்குதல்கள் குறித்து யாரும் கவலைப்படவேண்டாம் என்றும் அவர் எதிர்க்கட்சி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தார். (அ)

## யாழ்ப்பாணம்:

**நேர்காணலும் கட்டுரையாக்கமும்: கா. சுகன்யா, அகிலன் கதிர்காமர்**

# சிறு மீன்பிடித் தொழிலாளர் எதிர்கொள்ளும் சவால்கள்!

**அன்னலிங்கம் அன்னராசா (யாழ்மாவட்ட கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர்) உடனான நேர்காணல் இங்கு கட்டுரையாக்கப்பட்டுள்ளது.**







இவர் ஊர்காவற்றுறை தம்பாட்டி கிராமத்தை சார்ந்தவர். 1989ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து 1996இல் மீண்டும் மீளக்குடியேறியபின்பு கடற்றொழிலில் ஈடுபட தொடங்கினார். 2011ஆம் ஆண்டு கூட்டுறவுத்துறையுடன் தன்னை இணைத்துக் கொண்டு பின்நாட்களில் தம்பாட்டி கிராமத்தில் கடற்றொழில் சங்கத்தின் செயலாளராக இருந்து அதன் பின் சமாசத்தின் உபதலைவராகவும் தற்போது சம்மேளனத்தின் தலைவராகவும் பணியாற்றுகின்றார்.

**அன்றும் இன்றும்**

தம்பாட்டி முற்றுமுழுதாக ஒரு மீன்பிடிக் கிராமம். இவரது பரம்பரையினர் வீச்சுவலை, கோர்வலை போன்ற பாரம்பரிய மீன்பிடித்தல் முறைகளை நான்கு தலைமுறையாக செய்து வந்தனர். 2015ஆம் ஆண்டு வரை அது நீடித்தது. 18 முள மரத்தினால் செய்யப்பட்ட தெப்பங் களில் சென்று ஆழம் குறைந்த கடல்களில் கோர்வலையை பயன்படுத்தியும் ஆழம் கூடிய கடல்களில் வீச்சு வலையை பயன்படுத்தியும் மீன் பிடித்தனர். இந்த தொழில்முறை கடலுக்கும் தொழிலுக்கும் பாதுகாப்பானதாக இருந்தது. இதற்கூடாக கிடைக்கும் வருமானமும் போதியளவினதாக இருந்தது. அந்த வருமானத்தை வைத்துக் கொண்டு கடன்படாமல் வாழக்கூடியதாகவும், வீடுகளைக் கட்டக்கூடியதாகவும் இருந்தது.

தம்பாட்டி கிராமத்தில் 50 வருடங்களுக்கு மேலாக கடற்றொழில் கூட்டுறவு சங்கம் இயங்கி வருகிறது. இது 1990ஆம் ஆண்டுகளில் மீனவர்களால் பிடிக்கப்படும் இறால் மற்றும் மீன்களை விற்பனை செய்ய முடியாமல் இருந்தபோது அவற்றை மொத்தமாக கொள்வனவு செய்து யாழ்ப்பாணத்தின் ஏனையபகுதிகளில் உள்ள வியாபாரிகளுக்கு விற்பனை செய்து மீனவர்களுக்கான வருமானங்களை ஈட்டிக்கொடுத்தது. இறால்களை கருவாடுகளாக்கி கொழும்பிற்கு சந்தைப்படுத்தும் வேலைகளையும் செய்து வந்தது. யுத்தத்துடனான இடம்பெயர்வுடன் சங்கம் தனது சேவைகளை ஒழுங்குபடுத்தப்பட்டதாக வழங்க முடியாமல் இருந்தது.

2013ஆம் ஆண்டுக்கு பிறகு கடற்றொழில் உற்பத்தி பொருட்களை சங்கம் கொள்வனவு செய்து அதை வேறு தனியார் கம்பெனிகளுக்கு சந்தைப்படும் சேவையை செய்து வருகிறது. மற்றும் மீன் விற்பனை நிலையமாகவும் செயற்பட்டு வருகிறது. இது இடைத்தரகர்களால் ஏற்படும் விலை உயர்வுகளில் இருந்து கடலுணவுகளை உள்ளூர் மக்களும் நியாயமான விலைக்கு பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழில் சங்கங்களுக்கு 2012ஆம் ஆண்டில் கூட்டுறவு திணைக்களம் மற்றும் வெளிநாட்டு தொண்டு நிறுவனங்கள் பெரும்பாலான கடற்றொழில் சங்கங்களுக்கு சரியான முறையில் அதாவது ஐஸ் கொண்டு போய் மீன் பிடிப்பதற்கான உதவிகள், கூலர் வசதிகளுடன் மீன் சந்தைப்படுத்தலை மேற்கொள்வதற்கான வசதிகள் மற்றும்

**கரையோர சமூகம் நுண்கடன் பொறிக்குள் அதிகளவில் சிக்கியுள்ளது. இவர்கள் நுண்நிதி நிறுவனங்களிடமிருந்தோ அல்லது முதலாளிகளிடமிருந்தோ கடன்களை பெறுகிறார்கள். இதனால் அவர்கள் உழைக்கும் சிறு தொகைகளைக்கூட முழுவதும் நுண்நிதி நிறுவனத்திடம் கொடுக்க வேண்டிய நிலையுள்ளது.**

தற்போதுள்ள கடற்றொழில் சூழ்நிலைகளால் பாரம்பரிய முறையில் மீன் பிடித்தலை செய்யமுடியாதுள்ளது. குறிப்பாக பீளு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சுருக்குவலை, டைனமற் அடித்தல், வெளிச்சம் அடித்தல் போன்ற வழங்களை அழிக்கும் நவீன தொழில் நுட்ப முறைகளுக்கூடாக ஆழ்கடலில் மீன்கள் உற்பத்தியாகும் பகுதிகளுக்கு சென்று மீன் பிடிக்கின்றனர். இதனால் மீன்கள் கரைகளை நோக்கி வருவதில்லை. கரைகளில் சிறுமீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிறது.

மீன்பிடிதிணைக்களம் 12 கடல்மைல் களுக்கப்பால் சுருக்குவலைத் தொழிலை செய்வதற்கான அனுமதியை வழங்குகிறது. இதில் ஈடுபடுபவர்கள் அனைவருமே பெரிய முதலாளிகள். இவர்கள் திணைக்களத்தின் கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்கிறார்களா என்பதை யார் கண்காணிப்பது? பருத்தித்துறைக் கடலை எடுத்தால் சிறு மீன்பிடித்தொழிலாளர்கள் சூடை போன்ற மீன்களை பிடிப்பதற்குகூட 12 கடல்மைல்களுக்கு அப்பால் செல்லவேண்டியிருக்கிறது. இதற்கு 30 லீற்றர் எண்ணை செலவாகும். 2000 ரூபாவிற்கு எண்ணையடித்து 1000 ரூபாவிற்கு மீன் பிடிப்பதை எவ்வளவு நாளைக்கு தொடர முடியும்?

இந்த தடைசெய்யப்பட்ட மீன்பிடித் தொழிலுக்கூடாக பயன்பெறுபவர்கள் யாழ் மாவட்டத்தை சேர்ந்த கடற்றொழிலாளர்கள் அல்ல, அவர்கள் இலங்கையின் தெற்கு பகுதியில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் நிலையுள்ளது. ஏனெனில் ஒரு வருடத்திற்கு 9 லட்சத்திற்கு மேற்பட்ட தொகையை முதலிட முடியாது. இதைவிட கூலித்தொழிலுக்கு சென்றால் தினமும் குறித்ததொகைப்பணம் கிடைக்கும் என்று கூலித்தொழிலுக்கு செல்கிறார்கள்.

**பெண்களின் நிலை**

வலைகட்டுதல், கருவாடு உற்பத்தி செய்தல், வலை தைத்தல் போன்ற தொழில்களில் கடற்றொழில் சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்களின் தொழில்கள் சிறுமீன்பிடித்தொழிலில் ஈடுபடும் குறித்த பகுதியை சேர்ந்த ஆண்களை சார்ந்ததாகவே உள்ளது. இச் சிறுமீன்பிடித் தொழிலாளர்களுக்கு பிரச்னைகள் ஏற்படும்போது அது நேரடியாக அந்த பெண்களின் வருமானத்தையும் பாதிக்கிறது.

பெருமளவான கூட்டுறவுச்சங்கங்கள் ஆண்களை மையமாக வைத்தே செயற்பட்டு வந்தன. ஆனால் 2019ஆம் ஆண்டிலிருந்து கடற்றொழில்களில் ஈடுபடும் பெண்களும் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களில் இணைத்துக்கொள்ளப்படுகிறார்கள். இதை மேலும் வலுவூட்டும் வகையில் யாழ். மாவட்ட கடற்றொழில் சம்மேளனம் பலாலி, மைலிட்டி பகுதிகளில் மீளக்குடியேறிய பெண்களின் கருவாடு உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்கான கருவாடு விற்பனை நிலையத்தையும் உருவாக்கி கொடுத்து அவர்களுக்கான கடன்திட்டத்தை கூட்டுறவிற்கூடாக வழங்கும் முயற்சியையும்

கிறது; ஒற்றுமை என்பது மக்கள் மத்தியில் இல்லாமல் போகிறது. இதனால் கூட்டுறவாக செயற்படமுடியாத நிலையும் உள்ளது. கூட்டுறவு சங்கங்களுக்கூடாக தொழிலில் ஈடுபடும் பெருமளவான 22,624 மீனவர்கள் தடைசெய்யப்பட்ட மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவதில்லை. அவர்கள் தடைசெய்யப்பட்ட மீன்பிடித்தொழிலுக்கு எதிராக குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

கடற்றொழில் சமூகம் நகைகளை அடகுவைத்தோ அல்லது கடன்களை பெற்றோ ஒவ்வொரு வருடமும் புதிதாகத்தான் தொழிலுக்கு முதலீடு செய்வார்கள். கூட்டுறவுச்சங்கங்கள் அவர்களின் தொழிலுக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்து அதை கடனாக வழங்கவோ அல்லது நியாயமான விலையில் விற்பனை செய்யவோ வேண்டும். அத்துடன் கடலுணவுகளை தொகையாக கொள்வனவு செய்து வேறு பெரிய நிறுவனங்களுக்கு சந்தைப்படுத்துவதை செய்யவேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை செய்வதற்கூடாக சிறு மீன்பித்தொழிலாளர்களின் வருமானங்களை தற்போதுள்ள நிலையிலிருந்து அதிகரிக்க செய்யலாம்.

மேலும் கரையோர சமூகம் நுண்கடன் பொறிக்குள் அதிகளவில் சிக்கியுள்ளது. இவர்கள் நுண்நிதி நிறுவனங்களிடமிருந்தோ அல்லது முதலாளிகளிடமிருந்தோ தற்போது கடன்களை பெறுகிறார்கள். இதனால் அவர்கள் உழைக்கும் சிறு தொகைகளைக்கூட முழுவதும் நுண்நிதி நிறுவனத்திடம் கொடுக்க வேண்டிய நிலையுள்ளது. முதலாளியிடம் கடன்பெறும்போது அடுத்தநாள் அவரின் மீனை முதலாளிக்கே கொடுக்க வேண்டும் இதன்போது மீனுக்கான விலையை தீர்மானிப்பவராக முதலாளியே இருக்கிறார்.

இது போன்ற பிரச்சினைகளிலிருந்து கடற்றொழில் சமூகங்களை வெளியில் கொண்டுவருவதற்கு கூட்டுறவு சங்கங்களோ அல்லது சமாசங்களோ அவர்களுக்கான கடன் மற்றும் சேமிப்பு திட்டங்களை உருவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்தும் போது எதிர்காலத்தில் நல்ல மாற்றங்கள் உருவாகுவதற்கான வாய்ப்புகள் உண்டு. ■

# காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள புதிய முறையிலான காடு வளர்ப்பு

**ஜப்பானின் கடற்கரையோரங்களில் மியாவாக்கி காடுகளை உருவாக்குவதன் மூலம் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களை தடுக்க முடியும் எனக் கூறுகின்றார்கள். அது மாத்திரமல்லாமல் இது சூழலியல் வெப்பநிலையினை சமநிலைப்படுத்துவதாகவும் முறையான மழை வீழ்ச்சியினைப் பேணுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.**

**குந்தவி சிவபாலன்**

ஆதிகால மனிதனின் நம்பிக்கை இயற்கை சார்ந்தது. மனித இனம் இயற்கை மீது தனது ஒட்டுமொத்த நம்பிக்கைகளையும், எதிர்பார்ப்புகளையும் கொண்டிருந்தது. இதனால் அது அபரிமிதமானவொன்றாகக் காணப்பட்டது. காலப் போக்கில் நாகரீகத்தின் வளர்ச்சிப் படிக்கட்டுகளில் இயற்கைக்கான முக்கியத்துவங்கள் குறையத் தொடங்கின. எல்லை கடந்த தொழிநுட்ப வளர்ச்சி, மனிதனிடத்தே அதிகரித்த பேராசை, இவற்றையும் தாண்டி அபிவிருத்தி என்ற போக்கிலே இடம்பெறுகின்ற குறை அபிவிருத்தி போன்ற பல காரணங்களினால் முற்றுமுழுதாக பாதிக்கப்படுவது மனித இனம் தான். இன்றைய காலப் பகுதியில் நகர கட்டுமான அபிவிருத்தி எனும் வேலைத் திட்டங்கள் மூலமாக கட்டடங்களையும், வீதிகளையும் அமைக்க ஏற்படுத்தப்படும் காடழிப்பு எனும் அம்சம் மூலமாக எமது பூமி ஆபத்தான நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது.

பூமியின் வெப்பநிலை உயர்வு, தொழிற்புரட்சி காலத்துக்கு முந்தைய சராசரி வெப்பநிலையை விட கூடுதலாக, 2.4 செல்சியசை நோக்கிச் செல்கிறது. அது உலக நாடுகள் நிர்ணயித்த 1.5 டிகிரி செல்சியசை விட மிக அதிகமென அவ்வறிக்கை குறிப்பிடுகிறது. 2015ஆம் ஆண்டு பாரிஸில் நடந்த காலநிலை மாநாட்டில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் அபாயங்களைத் தடுக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதில் பூமியின் வெப்பநிலையை 1.5 டிகிரி செல்சியசுக்குள் கட்டுப்படுத்துவது அடக்கம். உலக நாடுகளின் வாக்குறுதிகளை விடுத்து கொள்கைகளை ஆராய்ந்தால் 2100ஆம் ஆண்டுக்குள் புவியின் வெப்பநிலை உயர்வு 2.7டிகிரி செல்சியசாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டுக்குள் பூமியின் வெப்பநிலையை உயர்த்தும் பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வு இருமடங்காக அதிகரிக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. புவியின் வெப்பத்தை 1.5 டிகிரி செல்சியசுக்குள் கட்டுப்படுத்தினால் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பல மோசமான விளைவுகளை தவிர்க்கலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதற்காகப் பல நாடுகள் பல திட்டமிடல்களை மேற்கொண்டு அவற்றினை நடைமுறைப்படுத்தி வருகின்றன. அதில் பெரும்பாலும் ஒவ்வொரு தேசமும் மாற்றீட்டு இயற்கை வழிகளையே தேடுகின்றன.

அதில் மிக முக்கியமான ஒரு திட்டமாக பல நாடுகள் பல காலமாக பயன்படுத்திவருவது தான் "மியாவாக்கி" முறை காடுவளர்ப்பு என்பதாகும். குறுகிய காலப்பகுதியில் அதிகளவு மரங்களினை உருவாக்குவதே இதன் சிறப்பம்சமாகும். இன்றைய காலத்தில் மிக வேகமாக மரங்களை வளர்க்க வேண்டிய தேவை உள்ளது. அளவுக்கு அதிகமான காடழிப்பு, சூழல் மாசடைவுகள் போன்றன நிகழ்கின்றன. இவற்றிலிருந்து தவிர்க்கப்பட்டு சூழல் சமநிலையைப் பேண வேண்டுமாயின் இவ்வாறான பொறிமுறைகள் வரவேற்கத்தக்கவொன்றாக இருக்கின்றன.



அகிரா மியாவாக்கி என்பவர் ஜப்பான் நாட்டினைச் சேர்ந்த தாவரவியல், சூழலியல் நிபுணர். தாவரங்களின் இயற்கையாக வளரும் திறன், தாவர சமூகவியல் குறித்த கல்வி , அனுபவம் மூலமாக தனது பெயரிலேயே மரம் வளர்க்கும் முறையொன்றை உருவாக்கினார். ஜப்பானிலுள்ள ஷிண்டோ புனிதத்தலங்களையும், கல்லறைகளையும் சுற்றி அமைக்கப்பட்டிருந்த காடுகளையும் அங்கிருந்த மரவகைகளையும் இதற்கான உதாரணமாகக் கொண்டார். அதுவே "மியாவாக்கி" எனும் பெயரில் குறுகிய காலத்தில் குறுங்காடுகளை வளர்க்கும் முறையாக அறியப்படுகிறது.

நகரங்களில் வெறுமையாக இருக்கும் பகுதிகளில் அல்லது வீடுகளின் பின்புறங்களில் உள்ளூர் மரங்களையும் அவற்றின் விதைகளையும் கொண்டு குறுங்காடுகளை உருவாக்குவதே மியாவாக்கித் திட்டம். அதன் தொடர்ச்சியாக இன்று உலகெங்கும் மியாவாக்கி முறையில் குறுகிய இடத்தில் அடர் வனங்கள் உருவாகிவருகின்றன. வழக்கமாக காடுகள் உருவாகுவதனை விட 10 மடங்கு வேகமாக மியாவாக்கி காடுகளை உருவாக்கி விட முடியும். இவை வழக்கத்தினை விட 30மடங்கு அடர்த்தி மிக்கதாகவும் இருக்கும்.

குறைந்த பட்சம் 2 ஆண்டு காலங்கள் பராமரித்ததன் பின்னர் அவை தானாக வளரும் சாத்தியம் அதிகம் இருப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதனாலேயே அண்மைக்காலங்களாக இந்த முறை காடு வளர்ப்புகள் இலங்கையின் அதிக இடங்களில் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் காடுகளால் பல்லுயிர்ப்பெருக்கம் நிகழுமென்றும் தேனீக்கள், வண்ணத்துப்பூச்சிகள் பெருகும் எனவும் கூறப்படுகின்றது.

மியாவாக்கி காடு வளர்ப்பு முறையினை எவ்வாறு மேற்கொள்ள வேண்டுமென்பதற்கு பொதுவான ஒரு செயன்முறை இருப்பதாக குறிப்பிடப்படுகின்றது. எந்த இடத்தில் காட்டினை உருவாக்க விரும்புகிறோமோ அங்கு 1 அடி முதல் 5அடி ஆழம் வரை மண்ணைத் தோண்டி எடுக்க வேண்டும். அந்த மண்ணில் தேங்காய் நார், பஞ்சு, உமி சேர்க்க வேண்டும். இவை ஈரப்பதத்தை தக்கவைக்கும் இயல்பு கொண்டவை. இவற்றுடன் சாணம் போன்ற இயற்கை உரத்தையோ அல்லது திடக்கழிவுகளை நுண்ணுயிர்ப் பெருக்கத்துக்கு உட்படுத்திய பின்னர் கிடைப்பவற்றையோ சேர்த்து மீண்டும் அந்த இடத்தில் பரப்ப வேண்டும். இதன் மீது வளர்ச்சி ஊக்கியையும் தெளிக்கலாம். சூரியஒளி வேர்ப்பகுதியில் விழாமல் தடுப்பதற்காக வைக்கோல், தென்னை மட்டை, பனை மட்டை, பாக்கு மட்டை அல்லது தாவரக் கழிவுகளைப் பரப்பி வைக்கலாம்.



தொடக்கத்தில் தினமும் நீர் ஊற்றி வந்தாலும் ஆறு மாதங்களுக்குப் பின்னர் மாதம் இரு முறையும் ஓராண்டுக்குப் பிறகு மாதத்திற்கு ஒருமுறையும் நீர்விடலாம்.

இவ்வாறு இதன் மூலம் நடப்படும் உள்ளூர் மரங்களாக வேம்பு, மலை வேம்பு, புங்கன், மகிழம், பூவரசன், இலுப்பை, பனை போன்றனவும் இவை தவிர மா, மாதுளை, கொய்யா உள்ளிட்ட பழ மரங்களையும் நடுகை செய்யலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறுகிய நிலப்பரப்பில் இடைவெளியில்லாமல் சிறிய சிறிய அடர் காடுகளை உருவாக்க முடியும் என்பதனை நிரூபித்துக் காட்டியுள்ளார் மியாவாக்கி. இதற்காக அவருக்கு 2006 ஆம் ஆண்டு சர்வதேச சுற்றுச் சூழல் அமைப்பு புளூ பிளநெட் விருது வழங்கிக் கௌரவித்திருக்கிறது.

ஜப்பானின் கடற்கரையோரங்களில் இவ்வாறான மியாவாக்கி காடுகளை உருவாக்குவதன் மூலம் ஆழிப்பேரலை போன்ற இயற்கை அனர்த்தங்களை தடுக்க முடியும் எனக் கூறுகின்றார்கள். அது மாத்திரமல்லாமல் இது சூழலியல் வெப்பநிலையினை சமநிலைப்படுத்துவதாகவும் முறையான மழைவீழ்ச்சியினைப் பேணுவதாகவும் குறிப்பிடப்படுகிறது. இவற்றினையும் தாண்டி உயிர்ப்பல்வகைமையினை விருத்தி செய்யும் இடமாகவும் பல்லுயிர் சரணாலயமாகவும் இது மாறும் எனக் கூறப்படுகின்றது.

மரங்கள் நடுதல் என்பது எமக்கு நாமே செய்யும் நன்றிக்கடன் எனக் குறிப்பிடலாம். ஒரு மனிதன் தனது வாழ்நாளில் ஒரு மரத்தையேனும் சரி நாட்ட வேண்டும். இயற்கை எமக்கருளிய வரப்பிரசாதங்களில் ஒன்றுதான் மரங்கள். எனவே இவ்வாறான எளிய இயற்கை பேண் செயற்பாடுகள் மூலமாக மிகப் பெரிய மாற்றங்களை நாம் கொண்டு வரலாம். அண்மைக்காலமாக இந்தியாவின் பல பிரதேசங்களில் இந்த மியாவாக்கி குறுங்காடு வளர்ப்புத் திட்டங்கள் முன்னெடுத்து வரப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து இலங்கையிலும் தற்போது இவ்வாறான செயற்பாடுகள் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கொழும்பு, எனப் பல இடங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

பூமியினை மாசுபடுத்தும் பல முறையற்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் மனிதர்களே, அதனைப் பாதுகாக்க வேண்டிய முயற்சியினையும் எடுப்பது மிகவும் வேடிக்கையான விடயமாகும். இந்த வருட COP26 காலநிலை மாநாட்டில் பூமியின் வெப்பநிலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு வரும்போதும், புவியின் வெப்பநிலை உயர்வைக் கட்டுப்படுத்தும் இலக்குக்கு அருகில் கூட உலகம் இல்லை என புதிய பகுப்பாய்வு கூறுகிறது. எது எவ்வாறான போதும் எம்மால் முடிந்தவரை மரங்கள் வளர்ப்பதன் மூலம் இயற்கைச்சமநிலையினைப் பேணி எம்மையும், எம்மைச் சுற்றியிருப்பவர்களையும் பாதுகாப்போம்.

**கட்டுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, ஊடகக் கற்கைகள் துறை, 4 ஆம் வருட மாணவி.**

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - I, II நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

34. நிழற்றப்பட்டவை அகற்றப்பட்ட பின் எஞ்சியிருக்கும் சிறிய சதுரமுகிக் குற்றிகள் எத்தனை?

1) 18 2) 24 3) 22

❖ பின்வரும் தகவல்களை வாசித்து 35ஆம், 36ஆம் வினாக்களிற்கான விடைகளைத் தெரிவு செய்க.

- A, C, E, F மேல் மாகாணதில் வசிப்பவர்கள்
- P, Q, R, S வடமாகாணத்தில் வசிப்பவர்கள்
- A, E, S பெண்களாவார்
- E, R, C, P அரச ஊழியர்கள்

35. மேலேயுள்ள தகவல்களின் படி இரு மாகாணங்களிலும் வசிக்கும் ஆண்கள் எத்தனை பேர்?

1) 5 2) 1 3) 9

36. பின்வருவனவற்றில் அரச ஊழியர் அல்லாத வடமாகாணத்தில் வசிப்பவர்களல்லாதவர்கள் யார்?

1) Q, S 2) A,E 3) A,F

37. நேற்றைக்கு முன்தினம் 24ம் திகதி புதன்கிழமை ஆகும். நேசன் தனது பிறந்த தினம் மாதத்தின் இறுதி நாளான செவ்வாய்க கிழமை என்று கூறினான் எனின் அவன் பிறந்த மாதம் எது ?

1) பெப்ரவரி 2) ஏப்ரல் 3) ஜனவரி

38. 178 + .................... + 510 + .................... = 1372 வெற்றிடத்தில் வரவேண்டிய இரு எண்களும் எவை ?

1. 263 , 411 2) 212 , 482 3) 252 , 432

39. பின்வருவனவற்றில் எவ்விரு இரட்டை எண்களினைக் கூட்டும் போது வரும் விடையினை இலக்கம் நான்கினால் வகுக்கும் போது மிகுதி 2 கிடைக்கும் அவ் எண் யாது?

1) 244 , 154 2) 147 , 295 3) 312 , 182

40. 5 மனிதர்கள் 4 மணித்தியாலத்தில் செய்யும் வேலையை 12 மனிதர்கள் எத்தனை நிமிடத்தில் செய்து முடிப்பார்.

1) 50 நிமிடங்கள் 2) 100 நிமிடங்கள் 3) 900 நிமிடங்கள்

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

விடியற் காலையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் விறுவிறுவென கலப்பையோடு தம் வயல் நோக்கி விரைகின்றனர். வியாபாரிகள் புதிய காய்கறிகளை விற்பதற்காகச் சந்தை நோக்கி வருகின்றனர். புத்துணர்வோடு மாணவர்கள் புதுத்தேடலுடன் பள்ளி செல்கின்றனர். கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண ஆடைகளுடன் வேலையைத் தொடங்க ஊழியர்கள் விரைகின்றனர்.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) விடியற்காலையை எதிர்பார்த்திருந்தவர்கள் யார்?

..........................................................................................

(ii) 'பாடசாலை' எனும் கருத்தைத் தரும் சொல்லை எழுதுக.

..........................................................................................

(iii) சந்தை நோக்கி வருகின்றவர்கள் யார்?

..........................................................................................

(iv) பந்தியில் உள்ள இரட்டைக்கிளவியை எழுதுக.

..........................................................................................

(v) உயர்திணைப் படர்க்கைப் பன்மைப் பெயர்ச் சொல் ஒன்றினை எழுதுக.

..........................................................................................

(vi) பந்தியில் உள்ள அடுக்குத்தொடரை எழுதுக.

..........................................................................................

02) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து **அதன் கீழ்கோடிடுக.**

(i) இந்தப் பூமியைச் சுற்றி ............................ மண்டலம் உள்ளது. (வலி / வளி / வழி)

(ii) சிங்கத்தின கர்ச்சனையைக் கேட்ட ஏனைய விலங்குகள் ஓடி .....ந்தன (ஒளி / ஒழி / ஒலி)

(iii) சுதந்திர தின விழாவின் போது...... வேடிக்கைகள் காட்டப்பட்டன (வான / வாண)

03) (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.
அச்சாணி இல்லாத தேர் ................. ஓடாது.

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
மானத்துடன் வாழ வேண்டும்.

..........................................................................................

04) சரியாக எழுத்துக்கூட்டப்பட்டுள்ள சொல்லைத் தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

(i) சம்பிறதாயம் / சம்பிரதாயம்

(ii) கலாசாரம் / கலாச்சாரம்

05) குணப்பெயரைக் குறிக்கும் சொல்லைத் தெரிவு செய்து அதன் **கீழ்க்கோடிடுக.**

(i) பாடுதல் (ii) வட்டம் (iii) கனினி

# 'எக்ஸ் - பிரஸ் பேர்ள்' கப்பல் தொடர்பில் கலந்துரையாடல்



கொழும்பு, நவ. 17

தீப்பற்றியதன் பின்னர் மூழ்கிய "எக்ஸ் - பிரஸ் பேர்ள்" கப்பலிலிருந்து எண்ணெய் கசிவைத் தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

நீதி அமைச்சர் அலி சப்ரி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, கடற்படை, துறைமுக அதிகார சபை மற்றும் நாரா உள்ளிட்ட நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

தீயால் ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் மீனவ சமூகத்துக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டன என்று நீதி அமைச்சு தெரிவித்துள்ளது. (இ)

# எரிபொருள்கள் தட்டுப்பாடு ஏற்படாதிருக்க நடவடிக்கை

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, நவ. 17

சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டாலும் நாட்டில் எந்தவித எரிபொருள் தட்டுப்பாடும் ஏற்படாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்னை தொடர்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தைக் குறைந்தது 50 நாட்களேனும் மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து நாட்டின் பல பாகங்களில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் குறித்த விடயம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்ட போதிலும் எரிபொருள் விலையை அதிகரிப்பது தொடர்பில் தீர்மானம் எட்டப்படவில்லை என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (இ)

# மக்களுக்கு எந்தப் பக்கத்திலும் நிவாரணம் கிடைக்கவில்லை!



## அரசை சாடுகின்றார் கிரியெல்ல

**கொழும்பு, நவ.17**

**வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கு எந்தப் பக்கத்திலும் நிவாரணங்கள் கிடைக்கவில்லை என்று எதிர்க்கட்சி பிரதம கொறடாவான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த அரசு தமது முதல் வரவு - செலவுத் திட்டத்திலேயே 800 பில்லியனை இல்லாமல் செய்தது. தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு முதல் ஆரம்பம் இதுவே. எங்கள் நல்லாட்சி அரசில் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு வழங்கியதுடன் நாட்டின் வருமானத்தையும் அதிகரித்தோம். ஆனால், இந்த அரசு பெருமளவான வரிகளைக் குறைத்து வருமானத்தை இல்லாமல் செய்துள்ளது.

இதேவேளை, எதிர்பார்த்த வருமானம் கிடைக்காது என்று அரசு இப்போதே ஏற்றுக்கொண்டுள்ளது. அரச நிறுவனங்களுக்குக் காலாண்டுக்கு நிதி ஒதுக்குவதாக கூறுவது வருமானத்தின் மீது நம்பிக்கை இல்லை என்பதனையே காட்டுகின்றது.

நாட்டில் இப்போது டொலர் பிரச்னை இருக்கின்றது. இதற்கு வரவு - செலவுத் திட்டத்தில் தீர்வு இல்லாமல் இருக்கின்றது. அத்துடன் கடனை எப்படிச் செலுத்தப் போகின்றோம் என்பதற்கான பதிலும் இல்லை. டொலரையும், வருமானத்தையும் அதிகரிக்க வேண்டுமாயின் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும். ஆனால், அதற்கான வேலைத்திட்டங்கள் இல்லை.

இவ்வாறான நிலைமையில் பாராளுமன்றத்துக்கு வராது மாலையில் ஊடகச் சந்திப்புகளை நடத்தி அரச சேவை சுமையானது என்று கூறுகின்றனர். இப்படி அரச சேவையைக் கேவலப்படுத்த வேண்டாம்.

நாங்கள் அரசாக இருந்தபோது அவர்களின் பெறுமதியை உணர்ந்து 10 ஆயிரம் ரூபாவால் சம்பளத்தை அதிகரித்தோம்.

இப்போது உரம் தொடர்பில் விவசாயிகளுடன் கலந்துரையாடவில்லை. இரசாயன உரத்தைத் தடை செய்தனர். அது தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடவில்லை. சௌபாக்கிய நோக்குத் திட்டம் 10 வருடங்களைக் கொண்டது. ஆனால், உரத்துக்கான தடையை ஒரு வருடத்துக்குள் செய்துள்ளனர். இது பணம் இல்லாமையால் செய்த நடவடிக்கையாக இருக்கின்றது.

பல இடங்களில் விவசாயிகள் பயிர்ச்செய்கையை செய்யவில்லை. அவர்களுக்கு இரசாயன உரம் கிடைக்கவில்லை. இதனால் விவசாயத்துறை பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது.

முருந்தெட்டுவே ஆனந்த தேரரை இவர்கள் பல்கலைக் கழக வேந்தராக நியமித்தனர். ஆனால், அவர் இந்த வரவு - செலவுத் திட்டத்தை புடோலங்காய் வரவு - செலவுத் திட்டம் என்று கூறியுள்ளார். அந்தளவுக்கு நிலைமை உள்ளது.

நாட்டில் தற்போது வரிசை முறை உருவாகியுள்ளது. எதற்கு எடுத்தாலும் வரிசையே காணப்படுகின்றது. நாங்கள் அரசை ஒப்படைக்கும்போது 2000 பில்லியன் ரூபா வருவாயுடன் ஒப்படைத்தோம். ஆனால், இந்த அரசு 800 பில்லியன் ரூபாவை இல்லாமல் செய்துள்ளது.

இவ்வாறான நிலைமையில் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கு எந்தப் பக்கதிலாவது நிவாரணம் இருக்கின்றதா என்றால் எந்தப் பக்கத்திலும் கிடையாது. மருந்து விலைகள் நூறு வீதம் அதிகரித்துள்ளது. அதேபோன்று பொருட்களின் விலைகள் தொடர்பிலும் கட்டுப்பாடுகள் இல்லை. வர்த்தக மாபியாக்களைப் பதவிகளுக்கு நியமித்தால் இவ்வாறுதான் நடக்கும். எங்களுக்கு இவற்றுக்கான பதிலே வேண்டும்" - என்றார். (இ)

# வீட்டுத் தோட்டத்தில் கஞ்சா; ஒருவர் கைது



கொழும்பு, நவ. 17

வெல்லவாய, ஆனப்பலம பிரதேசத்தில் நேற்று பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வீட்டுத் தோட்டமொன்றில் காணப்பட்ட கஞ்சா தோட்டம் சுற்றிவளைக்கப்பட்டதுடன், உலர் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரால் மிக சூட்சுமமான முறையில் தோட்டத்தில் கஞ்சா பயிரிடப்பட்டுள்ளதுடன், அங்கிருந்து 10 கஞ்சா செடிகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 150 கிராம் உலர்ந்த கஞ்சாவும், 325 கஞ்சா விதைகளும் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ஆனப்பலம பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதானவராவார்.

சந்தேகநபர் மேலதிக மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (இ)

# சுப்பர் மார்க்கெட்டில் பண மோசடி; பணியாளர்கள் ஐவர் மாட்டினர்!

கம்பளை, நவ. 17

நான்கு மாதங்களுக்கு மேலாகப் பல இலட்சம் ரூபா பண மோசடியில் ஈடுபட்டு வந்தனர் எனக் கூறப்படும் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கம்பளை நகரில் பிரபல சுப்பர் மார்க்கெட் ஒன்றின் பணியாளர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பளை - மலபார் வீதியில் அமைந்துள்ள குறித்த சுப்பர் மார்க்கட்டின் உரிமையாளர், கம்பளை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே, சந்தேகநபர்கள் ஐவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சனக் கூட்டமான நேரங்களில் பொருட்கள் கொள்வனவு செய்யவரும் பல வாடிக்கையாளர்களுக்கு ரசீதைக் கொடுக்காது, பொருள்களைக் கொடுத்தே மேற்படி ஐவரும் பணமோசடி செய்து வந்துள்ளனர் என்று விசாரணைகளின் மூலம் தெரியவதுள்ளது

கம்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கபில பண்டாரவின் ஆலோசனைக்கமைய கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் தொடர்ந்து விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ)

## கோடிக்கணக்கான பெறுமதியான

# கொக்ஹெய்ன் தொகையுடன் வெளிநாட்டுப் பிரஜை கைது!

11 கோடி 80 இலட்சம் ரூபா பெறுமதியுடைய கொக்ஹெய்ன் தொகையுடன் டியுனிசியா நாட்டுப் பிரஜை ஒருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதன்போது சந்தேகநபரிடமிருந்து 4 கிலோவுக்கு அதிகமான கொக்ஹெய்ன் மீட்கப்பட்டது எனச் சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும் பிரதி சுங்கப் பணிப்பாளருமான சுதத்த சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 59 வயதுடைய நபர் என்றும், மேலதிக விசாரணைகளுக்காகச் சந்தேகநபரும் அவரால் கொண்டுவரப்பட்ட போதைப்பொருளும் பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# பெலாரஸ் மீது ஐரோ. ஒன்றியம் தடை!

## குடியேற்றவாசிகள் விவகாரத்தால் வலுக்கும் நெருக்கடி

*பிரஸ்சல்ஸ், நவ. 17*

பெலாரஸ் மற்றும் போலாந்து நாடுகளுக்கு இடையிலான குடியேற்றவாசிகள் நெருக்கடியை பெலாரஸ் தீவிரப்படுத்தி வருவதால் அந்த நாட்டின் மீதான தடைகளை ஐரோப்பிய ஒன்றியம் மேலும் தீவிரப்படுத்தவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ராஜதந்திர அதிகாரிகளில் ஒருவரான ஜோசப் போரெல் இத்தடை விவகாரத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும் குடியேறிகள் பிரச்னை தீவிரமடைந்து வருவதாகவும், பாதிக்கப்படும் நிலையில் உள்ள குடியேறிகள் இப்போரில் சுரண்டப்படுவதாகவும் கூறினார். தனது நாட்டுக்குள் இருக்கும் குடி யேறிகளை எல்லையை நோக்கி வெளி யேற்றி பாதுகாப்பு பிரச்னையை ஏற் படுத்துவதாக பொலாரஸ் மீது குற்றம் சாட்டப்படுகிறது.

ஆனால் அதை பெலாரஸ் மறுக்கிறது. ஒரு பக்கம் பெலாரஸ் நாட்டுப் படை மறுபக்கம் போலாந்து நாட்டுப் படைக்கு மத்தியில் குடியேறிகள் சிக்கிக் கொண்டுள்ளனர். பெலாரஸ் நாட்டிலிருந்து வெளி யேற்றப்படும் குடியேறிகள் போலாந்து நாட்டுக்குள் நுழைய முடியவில்லை, அதே நேரம் பெலாரஸ் நாட்டுக்குள் மீண் டும் நுழைவதற்கும் அனுமதிக்கவில்லை.

இதனால் பெண்கள், குழந்கைள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் இரு நாடுகளில் எல்லைகளுக்கு இடையே சிக்கிக் கொண்டுள்ளனர்.


அண்மைய மாதங்களில் பெலாரஸில் இருந்து சட்டவிரோதமாக தங்கள் நாடுகளுக்குள் நுழைய முயற்சிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக போலந்து, லித்துவேனியா மற்றும் லத்வியா ஆகிய நாடுகள் கூறுகின்றன.

இவ்வாறு நுழைய முயலும் பலர் மத்திய கிழக்கு மற்றும் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத் தடைகளுக்குப் பழி வாங்கும் வகையில் புலம்பெயர்ந் தோர் ஊடுருவலை பெலாரஸின் சர்வாதிகார ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ எளிதாக்கியதாக ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை, பெலாரஸில் இருந்து சட்டவிரோதமாக போலந்துக்குள் நுழைய முற்படும் ஆயிரக் கணக்கான புலம்பெயர்ந்தவர்கள் உயிர் ஆபத்துக்களை எதிர்கொள்ளக்கூடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# பிரான்ஸ் தேசியக்கொடியில் மாற்றம் செய்தார் மக்ரோன்

## கடற்படை நீல நிறம் சேர்ப்பு



*பாரிஸ், நவ. 17*

பிரான்ஸின் மூவர்ணத் தேசியக் கொடியின் நீல நிறத்தை அதிபர் மக்ரோன் மாற்றி அமைத்துள்ளார் என்று பாரிஸ் ஊடகங்களில் செய்தி வெளியாகியிருக்கிறது.

எலிஸே மாளிகையில் காணப்படும் தேசியக் கொடிகளில் அதன் வழமையான மென் நீல நிறத்துக்குப் பதிலாகக் கடும் கடற்படை நீல வர்ணம் (darker navy blue) சேர்க்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. எந்த வித அறிவித்தலும் இன்றியே கடந்த ஆண்டு முதல் கடற்படை நீலநிறம் மாற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரெஞ்சுப் புரட்சியின் ஓர் அடையாளமாகிய தேசியக் கொடியில் ஆரம்பத்தில் சிவப்பு, வெள்ளை நிறங்களுடன் கடற்படை நீல நிறமே புழக்கத்தில் இருந்து வந்தது. அதனை 1976 இல் அப்போதைய அதிபர் கிஸ்கார் ஈஸ்ரிங் அரசாங்கம் மெல்லிய நீல நிறத்துக்கு மாற்றியமைத்தது. ஐரோப்பியக் கொடியில் காணப்படுகின்ற நீல நிறத்துடன் பொருந்தும் வகையிலேயே மெல்லிய நீல நிறம் மாற்றப்பட்டது. அதன் பிறகு நாட்டின் தேசியக் கொடியில் இரண்டு வகை நீல நிறங்களையும் பயன்படுத்தும் வழமை இருந்து வருகிறது.

அதிபர் மக்ரோனின் விருப்பத்தின் பேரில் தற்சமயம் எலிஸே மாளிகைக் கொடிகளும் கடும் நீல வர்ணத்தில் காட்சியளிக்கின்றன.

# 11 ஆண்டு சிறைத்தண்டனை பெற்ற அமெ. பத்திரிகையாளர் விடுதலை!

*யாங்கூன், நவ. 17*



11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அமெரிக்க ஊடகவியலாளர் டேனி பென்ஸ்டர், தண்டனை விதிக்கப்பட்ட மூன்றே நாட்களில் விடுதலை செய்யப்பட்டார்.

பிராண்டியர் மியன்மார் ஒன்லைன் தளத்தின் நிர்வாக ஆசிரியராக இருந்த 37வயதான பென்ஸ்டர், மே மாதம் யாங்கூன் சர்வதேச விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார்.

பெப்ரவரியில் இராணுவ சதிப்புரட்சிக்குப் பின்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ள டஸின் கணக்கான உள்ளூர் ஊடகவியலாளர்களில் இவரும் ஒருவர்.

பிராண்டியரின் கூற்றுப்படி, பென்ஸ்டர் இதற்கு முன்னர் மியன்மார் நவ் என்ற ஒரு சுயாதீன செய்தித் தளத்தில் பணியாற்றினார். இது ஆட்சிக்கவிழ்ப்புக்குப் பின்னர் இராணுவத்தை விமர்சித்துள்ளது.

மியன்மார் நவ் என்ற தடைசெய்யப்பட்ட ஊடகத்தில் அவர் பணியாற்றுகிறார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் குற்றச்சாட்டுகள் அனைத்தும் அமைந்தன. பென்ஸ்டர் 2020ஆம் ஆண்டு ஜூலையில் மியன்மார் நவ்வில் இருந்து இராஜினாமா செய்து அடுத்த மாதமே பிராண்டியரில் சேர்ந்தார்.

பென்ஸ்டர், குடியேற்றச் சட்டத்தை மீறியதற்காகவும், சட்ட விரோதமான தொடர்பு மற்றும் இராணுவத்திற்கு எதிரான எதிர்ப்பை ஊக்குவித்ததற்காகவும் குற்றவாளியாகக் கண்டறியப்பட்டார்.

அத்துடன் அவர் மீது தேசத்துரோகம் மற்றும் பயங்கரவாதம் ஆகிய இரண்டு கூடுதல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இதற்கான தண்டனை அறிவிக்கப்படாத நிலையில், கடந்த 12ஆம் திகதி அவருக்கு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த நிலையில் மியன்மாரில் இருக்கும் முன்னாள் அமெரிக்கத் தூதர் பில் ரிச்சர்ட்சன், ஊடகவியலாளர் டேனி பென்ஸ்டரை விடுவிப்பது குறித்து இராணுவ ஆட்சியாளர்களுடன் பேச்சு நடத்தி வந்தார்.

இதில் டேனி பென்ஸ்டரை விடுதலை செய்ய மியன்மார் இராணுவ அரசாங்கம் ஒப்புக்கொண்டது. இதன்படி சிறை தண்டனை விதிக்கப்பட்ட 3 நாட்களுக்கு பிறகு டேனி பென்ஸ்டர், நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.



## தாய்வான் விவகாரம் தொடர்பில்

# சீன-அமெ. தலைவர்கள் காரசாரமான விவாதம்!

*நியூயோர்க், நவ. 17*

தாய்வான் விவகாரத்தில் சீனா மேற்கொள்ளும் “ஒரு தலைப்பட்ச முயற்சிகளை” அமெரிக்கா கடுமையாக எதிர்க்கிறது என்று சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கிடம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இரு தலைவர்களுக்கும் இடையே அமெரிக்க நேரப்படி நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற மெய்நிகர் சந்திப்பின்போது பைடன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜின்ஜியாங் மற்றும் ஹொங்கொங்கில் சீனாவின் செயற்பாடுகள் உள்ளிட்ட பிற சர்ச்சைக்குரிய விடயங்கள் குறித்தும் இரு பெரும் வல்லரசுகளாக அமெரிக்கா மற்றும் சீனத் தலைவர்கள் விவாதித்தனர்.

கடந்த ஜனவரி மாதம் பைடன் பதவியேற்ற பின்னர் இரு தலைவர்களும் நடத்திய மிக முக்கியமான விவாதங்களாக இவை கருதப்படுகின்றன.

இதற்கிடையில், தாய்வானின் சுதந்திரத்துக்கான அமெரிக்காவின் ஆதரவு “நெருப்புடன் விளையாடுவது போன்றது. நெருப்புடன் விளையாடுபவர்கள் எரிக்கப்படுவார்கள்” என்று பைடனுக்கு ஜி ஜின்பிங் எச்சரிக்கை விடுத்தார் என சீன ஊடகங்களை மேற்கோள் காட்டி ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, “ஒரு சீனா” கொள்கையில் அமெரிக்கா உறுதியாக உள்ளது என்பதை ஜனாதிபதி ஜோ பைடன் இச்சந்திப்பில் சுட்டிக்காட்டினார் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

# ஒருமாத இடைவெளிக்கு பின்னர் தென்பட்ட வடகொரிய தலைவர்!

*பியொங்யாங், நவ. 17*



வட கொரியத் தலைவர் கிம் ஜோங் உன், சீனாவுடனான எல்லைக்கு அருகே முன்னெடுக்கப்பட்டுவரும் ஒரு பெரிய வளர்ச்சித் திட்டத்தை ஆய்வு செய்ததாக வடக்கின் அதிகாரபூர்வ கொரிய மத்திய செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்மூலம் ஒரு மாத கால இடைவெளிக்கு வட கொரியத் தலைவர் கிம் ஜோங் உன், பொது பார்வையில் தோன்றினார்.

இது சர்வதேச தனிமை மற்றும் அழுத்தத்தை எதிர்கொண்டு செழிப்பை அடைய தனது நாட்டின் விருப்பத்தை எடுத்துக்காட்டுகிறது கிம் கூறினார். மேலும், கட்டுமான முன்னேற்றம் குறித்து அவர் திருப்தி தெரிவித்ததாகவும் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் கிம்மின் குடும்பத்தினரால் போற்றப்படும் புனித மலையையும் அவர் பார்வையிட்டார் என அரச ஊடகம் படத்துடன் செய்தி வெளியிட்டுள்ளது. கிம்மின் குடும்பத்தினால் போற்றப்படும் புனித மலையான மவுண்ட் பெக்டுவுக்கு அருகில் இந்த நகரம் உள்ளது.

மேலும், இது நாட்டின் புரட்சியின் ஆன்மீக மையமாக அதிகாரபூர்வ கதைகளால் விபரிக்கப்படுகிறது.

வடகொரியாவின் வடக்கு அல்பைன் நகரமான சாம்ஜியோன், புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், ஹோட்டல்கள் மற்றும் வணிக, கலாசார மற்றும் மருத்துவ வசதிகளுடன் அமைக்கப்படுகிறது. இது ‘சோசலிச உட்டோபியா’ என்று அழைக்கப்படும் ஒரு பெரிய பொருளாதார நகரமாக மாற்றப்படுகிறது.



## தெல்லிப்பழை மகாஜன கல்லூரி விளையாட்டரங்குக்கு அடிக்கல்!

யாழ்ப்பாணம், நவ. 17

நாடு முழுவதும் 100 பாடசாலைகளின் விளையாட்டு மைதான அபிவிருத்தி நிகழ்வில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரியும் உள்வாங்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம், 32 இலட்சம் ரூபாய் செலவில் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான நிகழ்வு பாடசாலை அதிபர் ம. மணிசேகரம் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர் சிவசிறி, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் இணைப்பு செயலாளர் இராமநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

## 2022 இருபது - 20 உலகக் கிண்ணம் விவரங்களை வெளியிட்டது ஐ. சி. சி.

டுபாய், நவ. 17

2022ஆம் ஆண்டுக்கான ஆண்களுக்கான இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர் தொடர்பான விவரங்களை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி) வெளியிட்டுள்ளது.

2022 உலகக் கிண்ணத் தொடர் அவுஸ்திரேலியாவில் ஒக்ரோபர் 16ஆம் திகதி ஆரம்பமாகி நவம்பர் 13ஆம் திகதி இறுதிப் போட்டி இடம்பெறும்.

தகுதி சுற்றும், சுப்பர் 12 சுற்றும் பிரிஸ்பேன், ஜீலாங், ஹோபார்ட் மற்றும் பெர்த் ஆகிய நகரங்களில் இடம்பெறும். சிட்னி, அடிலெய்ட் நகரங்களில் அரையிறுதிப் போட்டிகளும், இறுதிப் போட்டி மெல்பேர்ன் நகரத்திலும் நடக்கும்.



உலகக் கிண்ணத் தொடருக்கு அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், இங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய 8 அணிகள் சுப்பர்-12 சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், நமீபியா, ஸ்கொட்லாந்து, மற்றும் முதல் சுற்றுக் கட்டத்தின் மூலம் போட்டியில் இணைகின்றன. போட்டிக்கான இறுதி நான்கு இடங்கள் இரண்டு தகுதிப் போட்டிகள் மூலம் நிரப்பப்படும்.

தகுதி சுற்று போட்டிகள் ஓமான் மற்றும் சிம்பாவேயில் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடைபெறும். (ஐ)

## உதைபந்தாட்ட உலகக்கிண்ணம் போர்த்துக்கல் அணிக்கு சிக்கல்!

லிஸ்பன், நவ. 17

பிபா உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடருக்கு தகுதி பெறுவதில் ரொனால்டோ தலைமையிலான போர்த்துக்கல் அணிக்கு சிக்கல் எழுந்துள்ளது.

உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடர் கட்டார் தலைநகர் டோஹாவில் நடக்கவுள்ளது. 2022 நவம்பர் 21ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 18ஆம் திகதி வரை நடக்கவுள்ளது. 32 அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடருக்கு இதுவரை கட்டார், ஜேர்மனி, டென்மார்க், பிரேசில், பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்பெயின், சேர்பியா, குரோஷியா அணிகள் தகுதி பெற்றுள்ளன.

ஐரோப்பிய அணிகளுக்கான தகுதி சுற்றுப் போட்டியில் ஏ பிரிவில் இடம்பெற்றுள்ள சேர்பியா, போர்த்துக்கல் அணிகள் நேற்று முன்தினம் மோதின. இதில் சேர்பியா அணி வெற்றி பெற்றது. 8 போட்டிகளில் 6இல் வெற்றி, 2 சமநிலை என 20 புள்ளிகளைப் பெற்ற சேர்பிய அணி உலகக் கிண்ணத்துக்கு நேரடியாகத் தகுதி பெற்றது.

17 புள்ளிகளுடன் இரண்டாவது இடம்பிடித்துள்ள கிறிஸ்ரியானோ ரொனால்டோ தலைமையிலான போர்த்துக்கல் அணி பிளே ஒவ் சுற்றில் விளையாடினாலே உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற முடியும். பிளே ஒவ் போட்டிகள் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் இடம்பெறவுள்ளன. (ஐ)

## இலங்கை டெஸ்ட் அணியில் அசலங்கவுடன் 4 புதுமுகங்கள்

கொழும்பு, நவ. 17

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக காலி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முன்னிட்டு 22 வீரர்கள் கொண்ட அணியை இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.




இந்த அணியின் தலைவராக திமுத் கருணாரட்ண நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், 4 வீரர்கள் டெஸ்ட் போட்டியில் அறிமுகமாகவுள்ளனர்.

சரித் அசலங்க, ஆரம்ப வீரர் கமில் மிஷார, சலதுறை வீரர் சுமிந்த லக்ஷான் பெர்னாண்டோ, வேகப்பந்துவீச்சாளர் சாமிக குணசேகர ஆகியோர் டெஸ்ட் அணியில் அறிமுகமாகவுள்ளனர்.

அசலங்க ஒருநாள், இருபது - 20 போட்டிகளில் ஏற்கனவே அறிமுகமாகியுள்ள நிலையில் டெஸ்ட் போட்டியில் இடம்பிடித்துள்ளார். மற்றைய வீரர்கள் உள்ளூர் போட்டிகளில் வெளிப்படுத்திய திறமையின் அடிப்படையில் அணிக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அணி விவரம் - திமுத் கருணாரட்ன (அணித் தலைவர்), ஒஷத பெர்னாண்டோ, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், தனஞ்சய டி சில்வா, பெத்தும் நிஸங்க, சரித் அசலங்க, மினோத் பானுக, கமில் மிஷார, ரொஷேன் சில்வா, ரமேஷ் மெண்டிஸ், சாமிக கருணாரட்ன, பிரவீன் ஜயவிக்ரம, லசித் எம்புல்தெனிய, லக்ஷான் சந்தகன், சுமிந்த லக்ஷான், சுரங்க லக்மால், விஷ்வ பெர்னாண்டோ, துஷ்மந்த சமீர, லஹிரு குமார, அசித பெர்னாண்டோ, சாமிக குணசேகர.

### உதைபந்தாட்ட உலகக்கிண்ணம்

## ஸ்பெய்ன், சேர்பியா, குரோஷியா அணிகள் நேரடித் தகுதிபெற்றன!

லிஸ்பன், நவ. 16

உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடருக்கு ஸ்பெய்ன், சேர்பியா, குரோஷியா அணிகள் நேரடியாகத் தகுதி பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் நடந்த தகுதி சுற்று போட்டியில், போர்த்துக்கல் சேர்பியா அணிகள் மோதின. இந்தப் போட்டியில், 1 - 2 என்ற கோல் கணக்கில் சேர்பியா வெற்றி பெற்து.



போர்த்துக்கல் அணிக்காக ரெனாடோ சாஞ்சஸ் 2ஆவது நிமிடத்திலேயே கோலடிக்க, சேர்பியாவுக்காக டுசான் டாடிச் 33ஆவது நிமிடத்தில் பதில் கோல் அடித்தார். ஆட்டம் சமநிலையில் தொடர்ந்த நிலையில், கடைசி நிமிடத்தில் 90ஆவது நிமிடத்தில் சேர்பிய வீரர் அலெக்ஸாண்டர் மிட்ரோவிச் தலையால் முட்டி அற்புதமாக கோலடித்து அணியை வெற்றி பெறச் செய்தார்.

இதேபோன்று சுவீடனுக்கு எதிராகக் களமிறங்கிய ஸ்பெய்ன் 0 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஸ்பெய்னின் செவில்லே நகரில் இடம்பெற்ற இந்தப் போட்டியில்அல்வாரோ மொராடா 86ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். ரஷ்யாவுக்கு எதிரான போட்டியில் குரோஷியா 0- 1 என்ற கோல் கணக்கில் வென்றது. ரஷ்ய வீரர் பியோதோர் குத்ரியா ஷோவ் 81ஆவது நிமிடத்தில் தவறுதலாக அடித்த ஒன் கோல் குரோஷியாவுக்கு சாதகமானது. (ஐ)

## இந்தியா - நியூசி. தொடர் விலகினார் வில்லியம்சன்!

வெலிங்டன், நவ. 17

இந்தியா - நியூசிலாந்து இருபது - 20 தொடர் இன்று புதன்கிழமை ஆரம்பமாகின்றது. இந்தத் தொடரில் அணித் தலைவர் வில்லியம்சன் விலகியுள்ளார்.

இந்தியா சென்றுள்ள நியூசிலாந்து அணி, 2 டெஸ்ட், 3 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகிறது.

வில்லியம்சன் விலகியமையால் ரிம் சௌதி தலைமையில் நியூசிலாந்து அணி விளையாடும். எனினும், டெஸ்ட் தொடரில் கேன் வில்லியம்சன் பங்கேற்பார்.

நியூசிலாந்து அணி விவரம் - ரிம் சௌதி (தலைவர்), டொட் ஆஸ்லே, ட்ரெண்ட் போல்ட், மார்க் சாப்மன், லோகி பெர்குஷன், மார்ட்டின் குப்தில், கைல் ஜேமிசன், அடம் மில்ன், டெரில் மிற்செல், ஜிம்மி நீசம், கிளென் பிலிப்ஸ், மிற்செல் சாண்ட்னர், ரிம் சைபேர்ட் (விக்கெட் காப்பாளர்), இஷ் சோதி (ஐ)



# மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!

## சபையில் சஜித் அணி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 17

**ஏழை மக்களின் வயிற்றில் சம்மட்டியால் அடித்துள்ள இந்த அரசிடமிருந்து மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புகாமி தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவிக்கையில்,

"நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப் பட்டுள்ள 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் ஏழைகளே இலக்கு வைக்கப் பட்டு தாக்கப்பட்டுள்ளார்கள். ஒருவர் விபத்து நடந்தால் விபத்தில் சிக்கியவர்கள் அரசுக்கு நட்டஈடு செலுத்த வேண்டுமாம்.

ஒரு விபத்து நடந்தால் அதில் சிக்கியவர்கள் காப்புறுதி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு நட்டஈடுகளைப் பெற்று தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதே வழமை.

ஓர் ஏழை விபத்தை ஏற்படுத்தினால் விபத்தால் நட்டப்பட்டு அரசுக்கும் தண்டம் செலுத்துவதென்றால் அவனின் நிலை என்ன?



மரக்கறிகளின் விலைகள் கூட கிலோ 700 ரூபாயைத் தாண்டி விட்டன. ஏழை மக்கள் மரக்கறிகளைக்கூட வாங்கி சாப்பிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் உரமின்றி விவசாயத்தைக் கைவிடும் நிலைக்குச் சென்றுள்ளனர். மீண்டும் ஒரு உணவுப்பஞ்சத்தை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கின்றது.

அமெரிக்க வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து ஏழை மக்களின் வயிற்றில் சம்மட்டியால் அடித்துள்ள இந்த அரசிடமிருந்து மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" - என்றார். (இ)

# நாட்டில் மீண்டுமொரு முடக்கத்துக்கு வாய்ப்பு

கொழும்பு, நவ. 17

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்தால், அரசாங்கம் மற்றொரு முடக்கத்தை நிராகரிக்கவில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் திடீரென அதிகரிப்பு ஏற்பட்டால், முடக்கம் ஒரு தெரிவாக இருக்கும் என்று சுகாதார அமைச்சின் உயர் மட்ட தகவல்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த சில நாடுகள் ஏற்கனவே மீண்டும் முடக் கத்தை அமுலப்படுத்தியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

மீண்டும் முடக்கத்தை தடுக்கப் பொதுமக்களும் அரசியல்வாதிகளும் பொறுப்புடன் செயல்படவேண்டும் என்று சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

மற்றொரு முடக்கம் பொது மக்களின் அன்றாட வாழ்க்கையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும். பைசர் தடுப்பூசிகளை அதிகளவில் எதிர்பார்ப்பதுடன், பூஸ்டர் தடுப்பூசி வழங்குவதை அதிகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆண்டு இறுதிக்குள் அதிகளவானவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசிகள் வழங்க இலக்கு வைக்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் கூறின. (அ)

# ஜனாதிபதி ஊடக விருது வழங்கல் விழாவுக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, நவ. 17

உள்ளூர் ஊடகவியலாளர்களை ஊக்குவிக்கும் வகையில், உத்தேச ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் விழாவை தெரிவு செய்யப்பட்ட ஆறு பிரிவுகளின் கீழ் நடத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் கீழ், தொலைக்காட்சி, வானொலி, அச்சு ஊடகம், இணையத்தளங்கள், பாடசாலை ஊடகங்கள் மற்றும் ஊடக ஆராய்ச்சி ஆகிய ஆறு துறைகளை உள்ளடக்கியதாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் 2021 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட படைப்புகளுக்காக விருதுகள் வழங்கப்படவுள்ளன.

எவ்வாறாயினும், ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் திகதி அல்லது விண்ணப்பங்களைக் கோருவது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. (இ)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

### தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான

# கேள்வி கோரல் - 2022

1. வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2021.11.17 - 2021.12.01 நண்பகல் 12.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2021.12.01 பி.ப 14.00 மணி வரை

கேள்வி திறக்கும் திகதி : 2021.12.01 பி.ப 14.30 மணி

2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

3. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.

4. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும். அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் சேவை வழங்குநர் தெரிவில் இவ்விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படும்.

5. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக்கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூரில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக ரூபா 2,000.00 இனையும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக ரூபா 25,000.00 இனையும் பணமாகச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளஉ, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளஉ அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறவேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

7. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.

8. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்ஃ கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்

9. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக வலிகாமம் கிழக்கு பிரதேசசபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.

10. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| 1 | வலிகாமம் கிழக்கு பிரதேசசபை தலைமை அலுவலகம், புத்தூர் | 01 | 01 | 2022.01.01-2022.12.31 |
| 2 | திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ நிலையம், கைதடி நீர்வேலி இணைப்பு வீதி, நீர்வேலி | 01 | 01 | 2022.01.01-2022.12.31 |
| 3 | அக்கரை கடற்கரை சுற்றுலா வளாகம் | 01 | 01 | 2022.01.01-2022.12.31 |
| 4 | அச்சுவேலி கொல்களம், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி | 01 | 01 | 2022.01.01-2022.12.31 |
| | மொத்தம் | 04 | 04 | |

*தியாகராஜா நிரோஷ்*
*தலைவர்,*
*உள்ளூராட்சி பெறுகைக்குழு*
*வலிகாமம் கிழக்கு பிரதேசசபை*
*புத்தூர்.*
*2021.11.17*

## அரசுக்கு...

இந்த ஆர்ப்பாட்டத்தை 'சாபக்கேடான அரசாங்கத்துக்கு எதிரான பேரணி' என்ற பெயரில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்தது.

**தடைகளை மீறி ஆர்ப்பாட்டம்**

பிற்பகல் 3.30 மணியளவில் எதிர்க்கட்சியின் தலைவர் அலுவலகம் அமைந்துள்ள சேர் மார்க்கஸ் பெர்னாண்டோ மாவத்தையில் (கொழும்பு-7) பேரணி ஆரம்பமானது. கொள்ளுப்பிட்டி சந்தியை அடைந்த பேரணி, அங்கிருந்து காலிமுகத்திடலை சென்றடைந்தது. காலிமுகத்திடல் சுற்றுவட்டத்தில் கூட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளி கட்சிகளின் தலைவர்கள் அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பல்லாயிரம் பேர் பங்கேற்றனர்.

**ஆர்ப்பாட்டத்தில் ராஜபக்ஷக்கள்**

இந்தப் பேரணியில் மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ ஆகியோர் போன்று வேடமிட்டு அவர்களின் முகமூடிகள் அணிந்தவாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பங்கேற்றிருந்தனர். அத்துடன், எரிவாயு விலையுயர்வை கண்டித்து எரிவாயு சிலிண்டருடனும் சிலர் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

**சோதனைகளும் தடைகளும்**

ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுத்த இந்தப் பெரும் போராட்டத்துக்கு தடைகள் ஏற்படுத்தும் நோக்கில் கொழும்பில் சோதனைச் சாவடிகள் பல அமைக்கப்பட்டன. அத்துடன், வெளிமாவட்டங்களிலிருந்து கொழும்புக்குள் நுழைவதற்கான பாதைகளிலும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்த சோதனை சாவடிகளில் கொழும்பு சென்ற அனைத்து பஸ்களும் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன. குறிப்பாக, கொழும்பு - களுத்துறை மாவட்ட எல்லையில் பாணந்துறையில் பயணித்த அனைத்து பஸ்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதே போன்று நுகேகொடை மேம்பாலத்திலும் பஸ்கள் சோதனையிடப்பட்டன.

**பல இடங்களில் போராட்டம்**

அரலங்கில, பொல நறுவை, மன்னம்பிட்டி, கத்துவெலை பகுதிகளில் போராட்டக்காரர்கள் பயணித்த பஸ்கள் திருப்பி அனுப்பப்பட்டன. ஆனால், அங்கிருந்து செல்ல மறுத்த போராட்டக்காரர்கள் சோதனைச் சாவடிகளிலேயே போராட்டங்களில் ஈடுபட்டனர். அத்துடன், வீதிகளின் குறுக்கே அமர்ந்தும் போராடினர். இதனால், பல இடங்களிலும் பதற்றநிலை காணப்பட்டது.

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியில் அநுராதபுர எல்லையை கடக்கவும் பேருந்துகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதேபோன்று ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் நுழைவாயில்களான ஹல்தமுல்லை, மரங்கஹவெல பகுதிகளிலும் கொழும்பு சென்ற வாகனங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டன.

**நீதிமன்றங்கள் தடை**

இதேவேளை, இந்த போராட்டத்தை முன்னெடுப்பதை தடுக்குமாறு நேற்று முன்தினமும், நேற்றும் பொலிஸார் நீதிமன்றங்களில் வேண்டுகை விடுத்தனர்.

புதுக்கடை நீதிவான் நீதிமன்றம் 5, மகர நீதிவான் நீதிமன்றங்கள் 1 மற்றும் 2, கடுவலை நீதிவான் நீதிமன்றம், ஹோமாகம நீதிவான் நீதிமன்றம் என்பன பொலிஸாரின் வேண்டுகையின் பிரகாரம் தடை உத்தரவு பிறப்பித்தன.

எனினும், கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றங்களான மாளிகாகந்தை, கங்கொடவில, கல்கிசை நீதிவான் நீதிமன்றங்கள் தடை உத்தரவை விதிக்க மறுத்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய அரசாங்...

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற பேரணியின் முடிவில் காலிமுகத் திடலில் உரையாற்றியபோதே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில், “இன்று நீங்கள் எதிர்நோக்கும் அனைத்து பாரதூரமான பிரச்னைகளையும் தீர்க்கும் உண்மையான மக்கள அரசாங்கத்தை உருவாக்கத் தயாராகுங்கள்.

மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை தீர்க்க, நாட்டைக் கட்டியெழுப்ப நாங்கள் தயாராக இருக்கிறோம். வீதியில் இறங்கிய எங்களின் முயற்சியை தடுத்து நிறுத்தும் அரசாங்கத்தின் அனைத்து முயற்சிகளையும் முறியடித்து இங்கு வந்துள்ளோம்.

மக்களின் துயர் துடைக்க இந்த மாபெரும் பேரணி நடத்தப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் தங்களை வெளிப்படுத்த உரிமை உண்டு. நமது சமுதாயத்தை கட்டியெழுப்பவும் சாதாரணர்களின் அரசாங்கத்தை அமைக்கவும் நாங்கள் தயாராக உள்ளோம். எதிர்க்கட்சிகளை நசுக்க சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு பரந்த அதிகாரங்கள் இருக்கும் அதேவேளை, அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. ஆனால், எதிர்க்கட்சிகளை கண்டு அஞ்சுகிறது. கோவிட் - 19 தொற்றுக்கு பதிலாக ஐக்கிய மக்கள் சக்தியை கட்டுப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது.

சப்புகஸ்கந்தையிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அதன் வரலாற்றில் முதல் தடவையாக மூடப்பட்டுள்ளது. எரிபொருள், பால்மா, சீனி, சிமெந்து வாங்குவதற்கு நீண்ட வரிசைகள் உள்ளன. இந்த சாபத்தால் நீங்கள் சோர்வடையவில்லையா? இந்த வரிசைகள் போதும் - என்றார். (ஐ)

## உயிர்த்த ஞாயிறு...

அடுத்த வருடம் மார்ச் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பிக்க உயர் நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

அருட்தந்தை சரத் இத்தமல்கொட உள்ளிட்ட தரப்பினர் தாக்கல் செய்த 12 அடிப்படை உரிமை மனுக்கள், பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரிய, புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜெயவர்த்தன, முர்து பெர்னாண்டோ, எல். டி. பி. தெஹிதெனிய, எஸ். துரைராஜா மற்றும் காமினி அமரசேகர ஆகிய 7 நீதியரசர்கள் குழுவின் முன்னிலையில் நேற்று பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன.

தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த மனுக்கள்மீதான விசாரணையில் இருந்து விலகுகிறேன் என்று நீதியரசர்களான பிரியந்த ஜெயவர்த்தன மற்றும் காமினி அமரசேகர ஆகியோர் மன்றுக்கு அறிவித்துள்ளனர்.

முஸ்லிம் அடிப்படைவாதிகள் அல்லது வேறு அடிப்படைவாதிகளால் தாக்கல் நடத்தப்படவுள்ளதாகத் தகவல் கிடைத்தும், 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்காத முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ உள்ளிட்ட அரச புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் , அப்போதைய ஆட்சியிலிருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்டோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்ட மா அதிபருக்கு எழுத்தாணை பிறப்பிக்கக் கோரி இந்த அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொரோனாவுக்கு...

கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,034 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் 9 பெண்களும் 9 ஆண்களும் உள்ளடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

## 13 இல் பறித்த...

யல் யாப்பில் இருப்பவற்றை நிறைவேற்றுங்கள். 13இலிருந்து பறிக்கப்பட்ட விடயங்களை மீளவும் தமிழ் மக்களுக்கு வழங்குங்கள்”, என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியும் புளொட் தலைவருமான த.சித்தார்த்தன் வலியுறுத்தினார்.

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு,

“அரசியல் யாப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை இன்று வரையில் நீங்கள் முழுமையாக அமுல்படுத்தவில்லை. அரசியல் யாப்பை மீறுவதில் நீயா? - நானா? என்று போட்டிபோடுகின்றீர்கள். 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த மறுப்பதானது அரசியல் யாப்பை அப்பட்டமாக மீறும் ஒரு செயலாகும். இதனை உணர முடியாதளவிற்கு எதேச்சதிகாரம் உங்களின் கண்களை மறைத்திருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதியும் இப்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ, 13 பிளஸ் தொடர்பில் பேசினார். இந்தியாவிற்கும் சர்வதேசத்திற்கும் அவ்வாறான வாக்குறுதியை வழங்கியிருந்தார். 2009இல் யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து, இலங்கைக்கு வந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துடன் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில், 13இற்கு அப்பால் சென்று தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதாக மஹிந்த வாக்குறுதியளித்திருந்தார். அந்த வாக்குறுதிக்கு என்ன நடந்தது?

இப்போது மீண்டும் உள்ளக பொறிமுறை தொடர்பில் பேசுகின்றீர்கள். புலம்பெயர் சமூகத்துடன் பேசவுள்ளதாக ஜனாதிபதி கூறியிருக்கின்றார். அரசியல் யாப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தையே முழுமையாக அமுல்படுத்த மறுத்துவரும், உங்களின் உள்ளக பொறிமுறையை சித்தசுவாதீனமுள்ள எவராவது நம்புவாரா?

இந்த அரசாங்கத்தால் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியுமென்பதில் எந்தவொரு நம்பிக்கையும் என்னிடமில்லை. ஏனெனில், நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு காரியத்தையும் நீங்கள் செயலில் காண்பிக்கவில்லை. உண்மையில், நீங்கள் கூறும் புதிய அரசியல் யாப்பானது - ஒற்றையாட்சி முறைமை நீக்கப்பட்ட - தமிழ் மக்களின் சமத்துவம் கௌரவத்தை உறுதிப்படுத்தும் அரசியல் ஏற்பாடுகளை கொண்டிருக்கின்ற - முக்கியமாக, அவற்றை பாராளுமன்ற பெரும்பான்மையின் ஊடாக மீளவும் பறித்தொடுக்க முடியாத ஏற்பாடுகளை கொண்டிருக்குமானால், அப்படியானதோர் அரசியல் யாப்பை நாம் இரு கரம்கூப்பி வரவேற்போம். ஆனால், நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடயங்களை உற்றுநோக்கினால், அரசாங்கத்திடம் அப்படியான எந்தவொரு நோக்கமும் இருப்பதாக தெரியவில்லை.

மாகாண சபைகள் செயலற்றிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மாகாண நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலைகள், மருத்துவமனைகளை திட்டமிட்டு மத்திய அரசின் கீழ் கொண்டு செல்கின்றீர்கள். அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூட இப்போது13ஆவது திருத்தச்சட் டத்தை நீர்த்துப் போகச்செய்யும் ஓர் இரகசிய படையணியாக தொழிற்படுகின்றதோ என்னும் சந்தேகம் எழுந்திருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

## ஞானசாரரின்...

திபதி செயலணியின் தலைவராக நியமித்ததன் மூலம் இலங்கை முஸ்லிம்களை மிரட்டப்பார்க்கின்றீர்களாவென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட எம்.பியுமான ரிஷாத் பதியுதீன் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு அவர் கேள்வி எழுப்பிய அவர் மேலும் கூறுகையில்,

இந்த நாட்டிலே தனியார் சட்டங்களை சில விடயங்கள் முஸ்லிம்களின் இனம், மதம்,கலாசாரம் தொடர்பில் உள்ளன. அதேப்போன்று தேச வழமை சட்டம், கண்டிய சட்டம் போன்றவையும் உள்ளன. இவற்றை இல்லாதொழித்து ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஒன்றை கொண்டு வருவதற்காக “உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி அல்லா” எனக் கூறிய ஞான சாரதேரரை ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவராக நியமிதுள்ளீர்கள்.

இந்த உலகில் அல்லாஹ்வை ஏற்றுக் கொண்ட 200 கோடி முஸ்லிம் மக்கள் உள்ளனர். அல்லாஹ்வை வஞ்சிப்பதை அல்லாஹ்வை ஏசுவதனை ஏற்றுக்கொள்ளாத 54 முஸ்லிம் நாடுகள் உள்ளன. அவ்வாறிருக்கையில் “உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி அல்லாஹ்” எனக்கூறிய ஒரு குற்றவாளியை முன்னாள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்ட ஒருவரை செயலணியின் தலைவராக நியமித்ததன் நோக்கம் என்ன?அல்லாஹ்வை கேவலப்படுத்திய ஒருவரை நியமித்தான் மூலம் நீங்கள் எதனை எதிர்பார்க்கின்றீர்கள்?

இந்த நாட்டில் வாழும் 20 இலட்சம் முஸ்லிம்களை மிரட்டலாம் என்று நினைக்கின்றீர்களா?இந்த நியமனத்தால் சிங்கள மக்கள் சந்தோஷப்படுவார்கள் என்று நினைக்கின்றீர்களா? சிங்களவர்கள் கூட இந்த நியமனத்தை ஏற்கவில்லை. 9 வருட காலம் ஜனாதிபதியாகவிருந்த மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரங்களை அவர் பிரதமராக இருக்கும் இந்த இரண்டு வருட ஆட்சியில் பலாத்காரமாக பிடுங்கி எடுத்து விட்டீர்கள் . அவர் எத்தனையோ புரட்சிகளை செய்தார். அவருடன் நாம் பக்கபலமாக இருந்து செயற்பட்டோம்.

ஆனால், இந்த இரண்டு வருட ஆட்சியில் சண்டித்தனமாக எமது உரிமைகளை. பறிக்கின்றீர்கள். நான் சிறையில் இருந்த போது எனக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதிகளைக்கூட இந்த சபையில் ஓர் இனத்தின் மக்கள் தலைவனாக கூறுவதற்கு நீங்கள் அனுமதிக்க வில்லை. எனது குரலை அடக்கினீர்கள். இவ்வாறான செயல்கள் மூலம் உங்களால் இந்த நாட்டில் நீண்ட காலத்துக்கு நின்று பிடிக்க முடியாது என்பதனை தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள் - என்றார்.

## மின்வெட்டும்...

உறுதிபட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், மின்சார விடயத்தில் எந்தப் பிரச்னையும் ஏற்படப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

சபுகஸ்கந்தை மூடப்பட்டுள்ளது, ஆனால் இந்த ஆண்டு நாங்கள் 50வீதம், நீர் மூலமும் 50வீதம் நிலக்கரி மூலமும் மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் மின்சாரத்தால் ஏற்பட்ட இழப்பு 3,500 கோடி ரூபாயாக இருந்த போதிலும் அதனை 500 கோடி ரூபாயாக குறைத்துள்ளதாகவும் அமைச்சர் காமினி லொக்குகே கூறினார்.

## நாட்டை...

கடிகள் இருந்தபோதும் அரசாங்கம் இம்முறை வரவு - செலவுத் திட்டத்தை சமர்பித்துள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்னேற்றகரமான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொதுமக்களைக் கேட்டுக் கொண்டார். (அ)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 15 - 02 - 1946 |  | 12 - 11 - 2021 |

### பொன்னுத்துரை செல்வராஜா

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும், கொய்யாத்தோட்டம், கொழும்பு, இத்தாலி ஆகிய இடங்களை வதிவிடமாகவும், சுவிஸை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை செல்வராஜா அவர்கள் கடந்த (12.11.2021) வெள்ளிக்கிழமை அன்று சுவிஸில் இறைபாதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை – இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா – மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தாதேவியின் ஆருயிர்க் கணவரும், சுரேஷ், மயூரா, மானஷா, சஜீவ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தில்லைநாயகி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், தியாகராஜா, சிவபாலன், கமலராணி, சிவநாதன், காலஞ்சென்ற செல்வராணி, புஸ்பராணி மற்றும் சிவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுரேஸ்கரன், வியோலேத்தா, வான்மதி ஆகியோரின் அன்பு மாமனாரும், கமலாதேவி, வைகுந்தவாசகம், காலஞ்சென்ற தயானந்தவாசகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மிதுர்ஷா, மிதுஷன், ஹரீஷ், சாய்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு :
Tuesday, 16 Nov 2021 1:00 PM - 4:30 PM
Wednesday, 17 Nov 2021 1:00 PM - 4:30 PM
krematorium Nordheim Käferholzstrasse 101, 8046 Zürich, Switzerland

கிரியை :
Thursday, 18 Nov 2021 9:30 AM - 2:00 PM
krematorium Nordheim Käferholzstrasse 101, 8046 Zürich, Switzerland

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Note : தற்போதைய Covid சூழ்நிலையால் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடித்து மரணச் சடங்கில் பங்கேற்குமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

தொடர்புகளுக்கு:
சஜீவ் - மகன்
Mobile : +41779760768

தகவல்:
குடும்பத்தினர்





# கிளிநொச்சி நகரத்தில் பொலிஸாருக்கு காணி அளவீடு செய்ய மக்கள் எதிர்ப்பு!

கிளிநொச்சி, நவ. 17

**கிளிநொச்சி நகரத்தில் பொலிஸாருக்கு காணி அளவீடு செய்வதற்கு மக்கள், பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் வெளியிட்ட எதிர்ப்பை அடுத்து அந்த அளவீட்டுப் பணிகள் நிறுத்தப்பட்டன.**

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கே/என் 23 கிராம அலுவலர் பிரிவில் உள்ள தனியாருக்கு சொந்தமான காணிகள் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்த காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் காணி அள வீடு செய்வதற்காக நில அளவையாளர்கள், பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் குறித்த இடத்துக்கு வருகை தந்தனர் .

இதனையடுத்து சம்பவ இடத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், காணி உரிமையாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப் படுத்தினர்.

அத்துடன் குறித்த காணி தொடர்பில் கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நடைபெற்று வருவதாக வும் காணி உரிமையாளர்கள் ஆல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து காணி அளவீட்டுப் பணிகள் இடைநிறுத்தப் பட்டன.

# மக்களைத் தடுக்கும் அதிகாரிகள்மீது ஐக்கிய மக்கள் சக்தி சட்ட நடவடிக்கை

## ரஞ்சித் மத்தும பண்டார எம். பி. அவசர அறிவிப்பு

கொழும்பு, நவ. 17

“வாகனங்களில் பயணிக்கும் நபர்களின் பெயர்ப் பட்டியலைத் தொகுப்பது, புகைப்படங்களை எடுப்பது என்று தனிமனிதரின் சுயாதீனத்துக்குக்கூட சவால் விடுக்கும் அளவுக்கு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதோடு, அந்த உத்தரவுகளின்படி செயல்படும் அதிகாரிகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.”

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் இன்று (நேற்று) ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பில் பொலிஸ் மா அதிபரால் மாகாணங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கு பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தி உன்னிப்பாக கவனம் செலுத்தியுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில் பொலிஸ் மா அதிபரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் அரசாங்கத்தின் அரசியல் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டவை என்பது தெளிவாகிறது.

பொலிஸ் மா அதிபரின் உத்தரவு, அரசமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள மக்களின் கருத்து வெளியிடும் மற்றும் ஒன்றுகூடல் தொடர்பான அடிப்படை உரிமையை பாரதூரமாக மீறும் செயலாகும் என்பதை சுட்டிக்காட்டுகிறோம்.

ஆர்ப்பாட்டத்துக்கு பொலிஸ் துறை கோரிய தடை உத்தரவுகள் பல நீதிமன்றங்களால் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸ் மா அதிபரின் உத்தரவு நீதிமன்ற உத்தரவையும் தாண்டிய ஒன்றாக உள்ளது.

கோவிட் தொற்றைக் கட்டுப்படுத்த ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட போதிலும் பிரதேச மட்டத்தில் வீதித் தடைகளை அமுல்படுத் துமாறு அறிவுறுத்தாத பொலிஸ் மா அதிபரால் தற்போது, இதுபோன்ற உத்தரவு பிறப்பிக் கப்படுவது முற்றிலும் அரசியல் தேவை கருதியதாகும்.

அத்துடன் வாகனங்களில் பயணிக்கும் நபர்களின் பெயர்ப் பட்டியலைத் தொகுப்பது, புகைப்படங்களை எடுப்பது என்று தனிமனிதரின் சுயாதீனத்துக்குக் கூட சவால் விடுக்கும் அளவுக்கு பொலிஸாருக்கு உத்தரவிடப் பட்டுள்ளது என்பதோடு, அந்த உத்தரவுகளின்படி செயல்படும் அதிகாரிகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதையும்










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ஒஸ்தி,தேவ ரத்தம் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை



**இரவு**
7.00 மணி : பாரதீ-இந்தவார பெண் ஆளுமை- சுகிர்தினி வேலாயுதம்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
9.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## சிவ ஒளி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம் திங்கள்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு